பதிவு என் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ...





| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4- 0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. | 12· |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. | 2· |
| ☞ தனி விகிதமும் உண்டு. | |

இதழ் 2 | ஈரோடு, அக்ஷய ஹ பங்குனி-மீ 7-உ (20—3—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 47.



# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)**

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

# பிராமணரல்லாதார் இயக்கமும் உத்தியோகங்களும்

பிராமணரல்லாதாரியக்கம் அவர்களுடைய முன்னேற்றத்தை நாடிபெற்பட்டதெனில், கல்வி, கைத்தொழில், விவசாயம், சமத்துவம் இதுகளை நாடி உழைக்கவேண்டுமேயல்லாமல், உத்தியோகங்களையும், பதவிகளையும், தங்களுக்குள்ள விதாசாரம் கேட்பது எதற்கு? என்று சிலர் ஐயுறலாம். மேலே கண்ட நான்குவகை அங்கங்களுக்கும் அதை நாம் அடைவதற்கும் உத்தியோகங்களை நாம் முதலில் பெறவேண்டியிருக்கிறதென்பதை அடியில் கண்ட சிலகாரணங்களால் வாசகர்கள் தெரியலாம்.

நமது மக்களாகிய பிராமணரல்லாதார்களில் நூற்றுக்கு தொண்ணூறுபேர்கள் நம்மையாளுபவர்கள் வெள்ளைக்காரர்களல்லர் என்றும், பிராமணர்களே ஆளுகிறார்களென்றும் நினைத்திருக்கிறார்கள். நமமுடைய சுயமரியாதையும் அந்தஸ்தும் பிராமணர்களாலேயும் பழமை வழக்கங்களாலேயும் நமது அறியாமையாலேயும் மூழ்கிக் கிடக்கின்றன. இதை நமது மக்களுக்கு சங்கங்களாலும் பத்திரிகைகளாலும் பிரசாரங்களினாலும் அடையுமபடி செய்யவேண்டியிருக்கிறது. இந்த கிராமங்கள் முதல் நகரங்களிருக கிளர்ச்சி செய்யவேண்டும். கிராமத்தார் முதல் நகரத்தார் வரை எல்லாரும் நமது இயக்கத்தில் சேரவேண்டியிருக்கிறது. இதற்கு முதலாவது இவர்களை நாம எஜமானர்கள் என்று கருதி அவர்களை நமக்கு இகபரம் இரண்டிற்கும் உரியவர்கள், நமக்கு அவர்களைத் திருப்தி செய்வதே மோட்சம், என்று பலவருடங்களாக நினைத்து அநுஷ்டித்தும் வந்திருப்பதால் இம்முறைகளை அடியோடு அறுத்துக்கொண்டு "நாமும் பிராமணரும் ஒரே கடவுளால் படைக்கப்பட்டோம். அவர்கள் முகத்திலிருந்தும் நாம் பாதத்திலிருந்தும் பிறக்கவில்லை. எல்லோரும் ஒரே வழியாகத்தான் பிறந்தோம்; கடவுளுக்கு நாம எல்லாம பிள்ளைகள்; அவருடைய பிள்ளைகளில் நீ உயர்ந்தோன் நான் உயர்ந்தோன் அவன் தாழ்ந்தோன் இவன் பஞ்சமன் என்று சொல்வது மஹாபாவம். ஆண்டவனுக்குப் பக்ஷமில்லையென்று சொல்லுவார்கள். ஆகையால் நமக்குள் ஏற்றத்தாழ்வில்லை எல்லாம ஒன்று, சமம்" என்று இன்று சொல்வோமானால் நம்மைத்தங்களுடைய சுயநலத்திற்காகவே அடிமைப்படுத்திவைத்துக்கொண்டிருக்கிற நமது பிராமண சகோதரர்கள் சம்மதிப்பார்களா? அவர்களுடைய அதிருப்தியை லட்சியம் செய்யாமல் சுயமரியாதையைப் பெரிதாய் விரும்புகிற நமது மக்களுக்கு அவர்களை ஆளுகிறார்கள் என்று சொல்லக்கூடிய மாதிரியில் சர்க்கார் உத்தியோகங்கள அவ்வளவும் அவர்கள் கையிலிருக்கும் போது அவர்பார்வையிலிருந்து தப்புவதெப்படி? இந்தக்காரணங்களைக்கொண்டே அதிகாரங்களை நாம் பெற வேண்டியது முதல் வேலையாய் விட்டதென்றும் உத்யோகங்கள் நமக்கு இல்லாமையால் நமது மக்கள் அச்சமின்றி நமது இயக்கங்களில் சேரமுடியாமலிருப்பதும் அப்படிச் சேராததால் நமது அடிமைத்தனம் நீங்காமலிருப்பதும் இரண்டு மூன்று உதாரணங்களைக்கொண்டு விளக்கலாமென்று நினைக்கிறேன்.

இப்போது நமது மக்கள் இத்தேசத்தில் ஜீவனோபாயத்திலிறங்கியிருக்கும் முக்கியமான தொழில்கள் ஐந்து அதாவது விவசாயம், வியாபாரம் உத்தியோகம், கைத்தொழில், நியாயவாதம், இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் நம்மவர்களுக்கு பிராமணர்களால் ஏற்படக்கூடிய பயம் என்னவென்பதை எடுத்துக்கொள்ளலாம்.

## விவசாயி.

அநேகமாய் விவசாயிகள் கிராமத்தில் வசிக்கிறவர்கள்; இவர்களுக்குள் காரணங்களை முன்னிட்டு கட்சிப்பிரதிகட்சிகளுமுண்டு அநேகமாய் பூமிகளின் சொந்தக்காரர்கள் இவர்களுக்கு இருக்கிற பயம் முதலாவது கணக்குப்பிள்ளை பிராமணர்; அவர் அதிருப்தி ஏற்பட்டால் சிவாஜிமா கட்டிபாப்பிட்டது இதற்கு நிவர்த்தி தேடப்போனால் அங்கே யார்? ரிவினியூ இன்ஸ்பெக்டர், டெபுட்டி தாசில்தார, தாசில்தார், டிபுடி கலெக்டர், தாலுக்காகச்சேரிமுன் விட்டம், சட்டம், கதவு, நிலவு, பூராவும் பிராமணர்கள்; அதுபோலவே கணக்குப்பிள்ளை ஒரு கேசுல் செய்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம. ஒருவன் கிரிமினல் பிராது கொடுக்கிறான். அப்போது போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் டெபுடி சூப்பிரண்டெண்ட், சப்-மாஜிஸ்ட்ரேட், டிபுடி கலெக்டர் எல்லாம் அவர்களே. இதுதான் போகட்டும், கிராமத்தார்கள் பிள்ளைகள் படிக்க வேணுமென்றால் தாலுக்கா போர்டு முனிசிபாலிடி பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் யார்? போகன் பள்ளிக்கூடம் கூட்டுகிறவன் நீங்கலாய் மற்றபேர் பிராமணர்கள். இதுகளை ஆக்ஷேபிக்கும் கட்சி இவர்கள் சுயமரியாதை வீரர்களாகவேண்டும். இனி

## வியாபாரியினிடம்போவோம்.

இவர்கள் பெரும்பாலும் நகரவாசிகள். இவர்களுடைய பிழைப்பு பெரும்பாலும் நாணயம் சம்பந்தமானது. ஒருவர் ஆயிரம் ரூபாய் வைத்துக்கொண்டு பத்தாயிரத்திற்கு தொழில் நடத்துகிறார் இவைபெல்லாம் கொடுக்கல் வாங்கல் சமமந்தம். பணம வாங்குற விடத்தில ஆசாமி யாருக்கு என்று வைத்துக்கொள்வோம். அங்கே ஏஜண்ட ஐயராப்பியர். அவருக்குக் கையெழுத்துப் போடுகிற வேலை தவிற மேலொன்றுமில்லை காஷியர் முதல் சிறிய குமஸ்தா வரையிலும் பிராமணர்கள் இப்போது ஏஜண்டுகளும பிராமணராக வந்துகொண்டிருக்கிறார்கள் இந்த வட்டிக் கடையைத்தான் கொண்டாலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் லக்ஷம் வைத்து கடை நடக்கும் பதுலட்சத்திற்கு வியாபாரம் நடக்கும் முதலாளிக்கு கடை அடையாளம் தெரியாது. பணம் கொடுக்கவேண்டிய ஆசாமி தெரியாது அவர் வருஷம் ஒருதரம் வந்து காரியஸ்தர் ஐயரைப் பார்த்து என்னாணும அந்த ஆசாமி எப்படி? இந்த ஆசாமி எப்படி? என்று கேட்கும்போது எல்லாரும் நல்ல இனம் முதலுக்கு மோசமில்லை. திராவிடச் செட்டியாருக்கு இவ்வருஷம் பெரிய நஷ்டமாம். அதற்குத் தான் நமது தொகைக்கு ரிஜிஸ்டர் கோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். தொகையை வசூல் செய்து விடுகிறேன் என்கிறார். முதலாளி செரி. செரி டிக்கிரிக்கு முன் ஜப்தி வாங்கி விடுங்காணும் என்று சொல்லி விட்டுப் போய் விடுகிறார். அதுவும் போகட்டும், திராவிடச்செட்டியாரோ பேர் அதாக இருந்தாலும் குமஸ்தா ஐயங்கார் தான். செட்டியார எதோ சுயமரியாதைக்கு வந்து விட்டார் என்று தெரிந்தவுடன் குமாஸ்தா மெள்ள பேச்சை விடுகிறார். எப்படி? எங்கள் முதலாளிக்கு எல்லாம் ஆய்விட்டது! வரவுக்கும் செலவுக்கும் பத்தும் பத்தாது போலத்தெரிகிறது; இனி நான் மெள்ள இதைவிட்டு நீங்கிவிடுகிறேன் என்று கொடிக்கு உலைவைத்து விடுகிறார். இந்த நிலையில் முதலாளி சுயமரியாதையில் கலையிடுவதெப்படி? இனி

## உத்தியோகஸ்தர்களுக்கு வரலாம்.

கவர்ன்மெண்டு கச்சேரிகள் பூராவும் பிராமணர்கள் மக்கிறாராம் என்று சொல்வது மிகையாகாது. இதில் ஏதோ பெரிய உத்தியோகஸ்தர்களுக்குப் பாதபூசை செய்து அல்லது அதிருஷ்டவசத்தால் பிராமணரல்லாதாருக்கு ஒன்றிரண்டு உத்தியோகம் கிடைத்தால் நித்திய கண்டம் பூர்ணாயுள் என்று சொன்னமாதிரி பிராமணபேஷ்காற் காலிக்கு "ரிட்டயர்னிங்" போட்டுக்கொண்டு "பூனை இருக்கிற வீட்டில் எலி ஜீவிப்பேத்தெடுக்க" மாதிரி காலத்தள்ளி வந்தாலும் "பங்காளியையும் பனங்காயையும் பதம் பார்த்து வெட்டு" என்கிற மாதிரி வேலையைத் தப்பேத்தி விடுகிறார்கள். இனி எஞ்சி நமக்கிருக்கிற உத்தியோகம் டவாலி முதலிய நம் உத்தியோகஸ்தருடைய குழந்தைகளை எடுப்பதும் அவர்களை கைவண்டியில் வைத்து இழுப்பதுந்தான்.

## கைத்தொழிலோ?

இது வேண்டுமானால நமக்குக் கொஞ்சம் ஜாஸ்தி பாத்யதையுண்டு. ஏனெனில இது அவர்களுக்குப் வேலையல்ல. நெற்றிவேர்வை நிலத்தில விழ தேகத்தைப் பிழியவேண்டும் இது நமது பிராமணர்களால் முடியாது. அதனால்தான் அந்த வேலையை பகிஷ்கரித்து விட்டார்கள் அதை பிராமணரல்லாதார் ஒப்புக்கொண்டபடியால் மேனாடுகளில் தொழிலாளியென்றால் ஒரு லார்டுக்குள்ள அந்தஸ்திருக்க இங்கே தொழிலாளியென்றால் அவருடைய உடையும் நடையும் பார்த்து ஏதோ இக்கூட்டம் ஒரு தனிப்பட்ட கீழ் ஜாதியைச் சேர்ந்ததென்று ஒரு தனிச்சாதி கொடுத்து விட்டார்கள். கடைசியாய்

## வக்கீல்களிடம் போகலாம்.

ஐயா, தாங்கள் நன்றாய்ப் படித்திருக்கிறீர்களே, உலக விவகாரங்களை தெரிந்தவராச்சே! பிராமணரல்லாதாராகிய நீங்கள் ஏன் நமது இயக்கத்திற்கு தலைவராக இருக்கக்கூடாது? உங்களுக்கு யாருடைய தயவு வேண்டும்? நீங்கள் சுயேச்சையுடையவர்,

[இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.]

# சோதிடமும் ராமேஸ்வர யாத்திரையும்.

(கைவல்லிய சாமியார் எழுதுவது)

சோதிடமென்பது கணிதம், பலபாகம், பிரசனம் இம்மூன்று முறைகளில் சூரியன் சந்திரன் பூமி முதலிய கிரகங்களின் நிலையும், சஞ்சாரமும் தோற்றமும் ஆகியவற்றை விவரிக்கும் வான சாஸ்திரத்தின் கணக்கேயாகும். குழந்தை பிறந்த நேரத்தில் இந்தக் கணக்கு பிரகாரம் கிரகங்கள் நின்ற நிலைக்குத் தக்கவாறு பன்னிரண்டு ராசியில் ஒன்பது கிரகங்களையும், இராவணன் காலத்தில் தேவர்களால் சனிக்குப் பிறந்த பிள்ளையான குளிகன் அல்லது மாந்தி என்னும் பத்தாவது கிரகத்தையும் அடைக்கிறார்கள். இதிலிருந்து நன்மை தீமைகளைச் சொல்லுவதற்கு பலமாகமென்று பெயர். இதற்கு அநேக சாஸ்திரங்களிருக்கின்றன. அதில் வடமொழியில் ஹோரையும், தென்மொழியில் குமாரசாமீயமும் முக்கிய நூலாகும். இதைக் கொண்டே பலன் சொல்லி நன்மை, தீமைக்கு கர்மகாண்டத்திலிருந்து பிராயச்சித்தமும் சொல்லி வருகிறார்கள். இவை சாதாரணமாக நடந்து வந்த அநேககாலத்திற்குப்பின் மலையாளத்தில் சோதிடம் சொல்ல அநேக தடைகளிருப்பதைச் சரிப்படுத்த, ஒரு நம்பூதிரி பிராமணனால் குடும்பங்களுக்கே ஜாதக முண்டுபண்ணி பிராயசித்த முறையும் வைத்திருப்பதற்குப் பிரசனமார்க்கமென்று பெயர். இவை மலையாளத்திற்கு ஏற்பட்ட சோதிடமானால் அங்குதான் விசேடம். இந்த இடத்தில் சிறிது கவனித்தீர்களானால் சோதிடத்திலுள்ள ஒரு உண்மை விளங்கும் எப்படியெனில் தந்தை பெயரில்லை; குடும்பத்தின் பெயரே சொல்லப்படுகிறது. குடும்பத்தைத்தான் "தரவாடு" என்பது. அங்கு மகனுக்கு யாதொரு பாத்தியமுமில்லை. அக்காள் தங்கை பிள்ளைகளுக்கே சர்வ பாத்தியதையும் உண்டு. இதைத்தான் மருமக்கள் தாயமென்பது. ராஜாக்கள், ஜெமீன்தார்கள் பெரிய மலையாளி குடும்பங்கள், இவர்கள் வீட்டுப் பெண்களுக்கெல்லாம் புருஷன்மார் நம்பூதிரி பிராமணர்களே. இதைத்தான் "சம்பந்த"மென்பது. நம்பூதிரி மூத்தவனுக்குத் கலியாணம் மற்றவர்களெல்லாம் முன்சொன்ன நாயர்கள் வீட்டிலே பெண்களை "சம்பந்தம்" வைத்துக்கொள்ள வேண்டியது. குடும்பமென்றால் மனைவி என்னும் அர்த்தப்பிரகாரம் சோதிடத்திலும் குடும்ப ஸ்தானமென்பதற்கு பெண்ஜாதி என்றே அர்த்தம். ஒரு ஜாதகனுக்கு சோதிடம் சொல்லும்போது புருடனுடைய சுகதுக்கம் பெண்ஜாதியிடம் நிலைத்திருப்பதால் களத்திரஸ்தானத்தைப்பற்றி அவசியம் வர்ணித்து குணதோஷம் சொல்லவேண்டும். நம்பூதிரி பிராமணனுக்கு மலையாளப் பெண் சரியான பெண்ஜாதியாவதுமில்லை, சோதிடம் சொல்லுவதில் அநேக லௌகிகத்தடைகளுமிருக்கின்றன. ஒரு ஜாதகனுக்கு புத்திரபாக்கியமும் அதைப்பற்றிய பிரபல்யமும் முக்கியம். இதைப்பற்றியும் சொல்ல முடியாது. புத்திரர்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மலையாளி ஜாதகனுக்கு தந்தையைப்பற்றி கேட்க முடியாது. அநேக பெரிய குடும்பங்களுக்கு நம்பூதிரி பிராமணனே தந்தை. சோதிட ரீதியாய் சோதிடம் சொல்லுகையில் களத்திரபாவத்தையும், புத்திர பாவத்தையும் விட்டு விட்டு சோதிடம் சொல்ல வேண்டும். மூத்த நம்பூதிரி தவிர மற்ற நம்பூதிரிகளுக்கும் ராஜாக்களுக்கும் ஜெமீன்தார்களுக்கும் பெரிய நாயர் குடும்பங்களுக்கும் சோதிட ரீதியாய் களத்திரபாவமும், புத்திரபாவமும், சொல்லுவது சாஸ்திர ரகசியத்திற்கு ஒத்தாலும் அவர்களுடைய லௌகிக வாழ்க்கைக்குப்பாதகமாயிருப்பதைச் சரிப்படுத்த "பிரசன மார்க்கம்" உண்டுபண்ணினார்கள். அதை அனுசரித்து தனி ஜாதகமல்லாத குடும்ப ஜாதகமாக ஏற்படுத்தி நன்மை தீமையும் சொல்லப்பட்டு வருகிறது. மலையாளத்து சோதிடரான் அந்த தேசத்தில் ஜாதகம் சொல்லவேண்டியவர்களானதால் அதையும் படித்து பரம்பரையாகப் பழகிவந்தார்கள். இப்பொழுது தமிழ் நாட்டிலும் அவர்கள் சோதிடம் சொல்லுவது வழக்கமாகிவிட்டது. நம வழக்கபழக்கங்கள் அவர்கட்கு அநேகமாகத் தெரியாது அநேக பிராயச்சித்தமும் விதிக்கிறார்கள். அவன் கவடிப்பலகையை (பலகறை) எடுத்து கக்கத்தில் வைக்கையிலேயே தமிழ் நாட்டு ஜனங்களை ஏமாற்றலாம் என்கிற எண்ணத்துடனே புறப்படுகிறான்.

சோதிடம் சரியா? தப்பா? வானசாஸ்திரமான கணிதம் மனிதனுடைய நன்மை தீமைகளைப் பகுத்துச்சொல்ல எப்படி பலபாகமாயிற்று? சோதிடம் மானசீக சாஸ்திரம்; ஈஸ்வரசக்தியோ மனோசக்தியோ உடையவர்கள் சொல்லவேண்டும். சோதிடத்தில் காணும் கிரகங்கள் தேகமனதைத் துவக்கிலும் மறைத்திருக்கின்றன. இதை யோகிகளே உணர்வார்கள்; சோதிடம் புத்திக்கு ஒவ்வாத விஷயம்; சோதிடம் சந்தனமும் குறிப்பிட்டப் பிரகாரம் பலித்தபோதிலும் பெரும்பாலும் அவை நிறைவேறாமற்போவதனால் சோதிடத்தில் நம்பிக்கை வைப்பது மனித சுபாவபலஹீனமேயன்றி வேறன்று. சோதிடத்தால் மனச்சஞ்சலமும் பிரயத்தினக்குறைவும் உண்டாகின்றன. தகுந்த ஆணுக்கும் தகுந்த பெண்ணிருந்தும், அர்த்தஸ்துபொருத்தம் குணப்பொருத்தம் மனப்பொருத்தம், குடும்பப்பொருத்தம், இலட்சணப்பொருத்தம், பிராயப்பொருத்தம் தாரப்பொருத்தம் முதலிய பொருத்தங்களிருந்தும் சோதிடக்கணக்குப் பிரகாரம் ஆலோசியாத சோதிடன் பொருத்தமில்லையென்று சொன்னதால் சந்தோஷத்தை இழந்த குடும்பங்கள் எத்தனை? தகாத ஆணுக்கும் தகுந்த பெண்ணுக்கும், தகாத பெண்ணுக்கும் தகுந்த ஆணுக்கும் மனப்பொருத்தம் இலட்சணப்பொருத்தம் பிராயப்பொருத்தம் தாரப்பொருத்தம் இல்லாதிருந்தும் சோதிடக்கணக்குப் பிரகாரம் பொருத்தமிருப்பதாகச் செய்யும் கலியாணத்தால் துக்கம்குடி கொண்ட குடும்பங்கள் எத்தனை? லட்சுமணசிங்கு மகாராஜாவின் மகன் குருப்பிரசாத் என்று ஒரு கோடீஸ்வரர் பலக்காட்டிலிருந்தார். முப்பதாவது வயதில் தனக்கு கண்டமென்று சோதிடம் சொல்ல முப்பது வயதில் தன் ஆஸ்தி பூராவும் செலவு செய்து 67 வயது வரையிலுமிருந்து ஏழையாயிறந்தார். மலையாளத்தில் வடமொழி தென்மொழி இரண்டிலும் தனக்கு நிகரிலாத பாண்டித்தியமடைந்து ஆங்கிலமும் கற்று ஹோரைக்குள்ள பதினொரு வியாச்யானமும் தெரிந்து குமாரசாமீயத்தை அப்படியே குடித்து மலையாள பெரிய சோதிடர்களிடமெல்லாம் தர்க்கம்பண்ணி சிக்கறுத்து ஆயுள்பாதகணிதம் வரையும் தன் ஜாதகத்தை கணித்து இனியும் பத்து வருடம் உயிரோடு இருப்பேன் என்று தன் சொத்தை வில் எழுதவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்த பாலக்காடு பண்டிதர் கடேசம் பிள்ளையவர்கள் காலமடைந்து எட்டுமாதமாயிற்று. இப்பேர்ப்பட்ட அநேக அனுபோக சாஸ்திர பண்டிதர் கதைகளும் வசிஷ்டனால் ராமருடைய பட்டாபிஷேக நிச்சயமும், சங்கராச்சாரியார் நித்திய பலன் கணித்து வருகையில் தன் கைசாதனம் ஒரு நாள் தவற அவை கணிதத்தில் காணாமையும். ராஜன் ஒரு வருடத்தில் இறப்பான் என்று சொன்ன சோதிடனை, நீ எத்தனை வருடமிருப்பாய் என்று மந்திரி கேட்க, நான் இருபது வருடமிருப்பேன் என்ற சோதிடன் தலையை உடனே வெட்டி ராஜனைத் தேற்றின கதையும் நவீன கிரகங்களின் தோற்றங்களாலும் ஆராய்ச்சியாலும் நாம் முன்கண்ட தீர்மானக் கணிதமும் பயனும் இப்பொழுது தடுமாற்றமுண்டாகிறது. அப்படியிருக்க அவற்றின் நன்மை தீமைகளை உள்ளபடி தெரிந்து கூறுதல் மானிட இயல்பிற்கு இயலாதென்றும் கணித வல்லவர் சாமிக்கண்ணு பிள்ளை சொல்லுவதுபோல் இன்று எந்தெந்த நிலைமையில் எங்கெங்கே கிரகங்கள் நிற்கிறதோ அந்த நிலைமையில் இன்னொரு நாள் வருவதற்கு இருபதினாயிர வருடம் செல்லுமாம். மனிதனுடைய சுபாவீகமான அறிவின் சக்தியும் ஓரளவிற்குட்பட்டதேயன்றி அதைக்கடந்ததன்று. இத்தியாதி காரணங்களினால் சோதிடத்தில் சந்தேகமுதிக்கின்றது. மானசீக சாஸ்திரத்தை தெய்வீக தன்மை பொருந்தியவன் சொல்லவேண்டுமென்று நாமே சொல்லுகிறோம். பின் சாதாரணமான ஆள் நோக்கம் கண்டு சொல்லுகிறவனிடம் சோதிடம் கேட்கிறோம். பின் சாஸ்திரம் சரிதான் சொல்லுகிறவன் சரியாகச் சொல்லுவதில்லையென்று நாமே பேசுகிறோம். சோதிடன் கூலியை நினைப்பானே ஒழிய தன் பெரும் பொறுப்பை உணர்வதில்லை. சோதிடப்பிரகாரம் கர்மங்கள் செய்து கெட்ட குடும்பங்கள் அநேகம். சத்துருவால் பில்லி சூனியம் ஏவல் செய்வினை என்று சொல்லி பந்துக்களும் உண்மை சிநேகிதர்களும விரோதப்பட்டு குரோதத்தில் அவஸ்தைப்பட்ட குடும்பமனேகம். ஹோமத்தாலும் ஜெபத்தாலும் பூசையாலுமே இவன் பிழைப்பான் என்று வைத்தியமும் பக்குவமும் இல்லாமல் மாண்டவர்கள் அநேகம். பெண் புருடன் வீட்டில் சில காலமிருக்கவேண்டும், கர்ப்பம் இப்பொழுது உண்டானால் இருவரில் ஒருவர் மரிப்பார் என்று கேட்டு கெட்ட குடும்பமெத்தனை! இதை விரித்துக்கொண்டேபோனால் பெருகும். ஆலோசனை, புத்தியுடைய நீங்களே ஆலோசித்துக்கொள்ளுங்கள். நான் சொல்ல வந்த விஷயத்தை கவனிப்போம்.

சோதிடனால் ஜாதகம் பார்த்து கிரகதோஷத்திற்காக ராமேஸ்வரம் போய் சில கிரியைகளும் தானங்களும் செய்துவந்தாலே குடும்பம் க்ஷேமமடையுமென்று சோதிடனால் சொல்லப்பட்டு ராமேஸ்வரம் போய் வருகிறவர்கள் அநேகர். குடும்ப சகசமாகவோ தனியாகவோ ராமேஸ்வர யாத்திரை செய்து சந்தோஷப்படுவதில் ஆக்ஷேபனை கிடையாது. யாத்திரை வாசிகள் சில விஷயங்கள் கட்டாயம் கவனிக்கவேண்டும். உங்களுக்கு ராமேஸ்வரத்தில் கிரியை நடத்தும் புரோகிதனுக்கும் இங்கு சோதிடம சொல்லும் சோதிடனுக்கும் சம்பந்தமுண்டு. இருவருக்கும் கிடைப்பதில் பங்கு (கமிஷன்) உண்டு. சோதிடம் பார்க்கையில் தோஷம் காணுமிடத்தில் ராமேஸ்வர யாத்திரையும் அங்கு செய்யவேண்டிய கர்மங்களும் விதித்துவிடுவான். முக்கியமான இடத்தில் தோஷம் சொல்லுவதால் சோதிடம் கேட்பவர்களுக்கு செய்தே தீரவேண்டியிருக்கிறது. சுரம் வந்தவனுக்கு பத்தியம் சொல்லுகையில் நிச்சயமில்லாத இங்கிலீஷ் வைத்தியர்கள் தாங்கள் பேப்பரில் படித்து வைத்திருக்கும் கஞ்சி முதலில் நினைவிற்கு வந்து தங்களுக்கு வேண்டிய ஷாப்பிலிருப்பதையே எப்படி சொல்லுகிறார்களோ அதுபோல் சோதிடத்தில் தோஷமென்று கண்டால் யாத்திரை செய், பார்ப்பானுக்குக்கொடு வென்று சொல்லிவிடுகிறார்கள். அவர்களைச் சொல்லுவதில் குற்றமில்லை. எல்லா ஏட்டிலும் பார்ப்பானுக்குக் கொடுவென்றே எழுதிவைத்திருக்கிறது. இந்த பார்ப்பானுக்கு கொடுக்கவேண்டும், ஆனால் உனக்குப் புண்ணியம் இந்த பார்ப்பானுக்கு கொடுக்

[இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.]

# உண்மை விளக்கம்.

(சிவசம்புசாமி எழுதுவது)

வெற்றி நீள தண்டமிழ் நாட்டு வீரர்காள்! கற்றவர் அறிவிலே கவின மூத்தவர், பற்று முற்று மொழிந்த அருளிலே பழுத்த அந்தணர், கொற்ற வாள் வேந்தர் முதலிய கோதில் பெருமக்கள் குலவிய செந்தமிழ் நாடு பந்தத்துக் குள்ளாகி வழி வழி அடிமைகளாய் மாறுத அபகீர்த்திக்கு இலக்காய் வாழ்வதைப்பார்த்துச் சகியாத ஒரு சில மானமுடையோர் தம் மானங்காக்கும் தகுதியுடைய வழியைத் திறந்து காட்டினர். அதனால் ஒரு சிறிது நம்மவர்க்கு ஊக்கம் பெருகி உழைக்கத் தலைப்பட்டனர். ஆனால் சிற்சில காலவேற்றுமைகளில் இடையில் ஊக்கங்குன்றிப் பேராறிவும், போராற்றலும், இடைவிடா முயற்சியும், எடுத்த காரியத்திலே அடுத்தடுத்துச் செல்லும் உள்ள முடைமையும் மேல் நோக்கிச் செல்லாமல் தடைப்பட்டதிலிருந்து தாந்தோன்றித்தறிதலைகளாகிய மாற்றார் ஏற்ற சமயம் இதுவேயென்று எங்கும் பொய் வெற்றி முழக்கத்தைப் புலப்படுத்தினார்கள். அதை மெய்யென்று நம்பிய வயிற்றுச்சோற்றுத் தம்பிரான்களாகிய நம்மவர் சிலர பக்கத்திலே நின்று கெக்கலி கொட்டி ஆடிப்பாடிக்களித்தனர். அந்தோ! அவர்தம் அறியாமை இருந்தவாறென்னே! ஏழைப் பார்ப்பானும் இடங்கண்டால் விடமாட்டானன்றோ? கற்றோரும் மற்றோருமாகிய விப்பிரத்தப்புப் பேர் வழிகள் ஒப்புக்கு மாரடிக்கும் முறையிலே அந்த இளித்தவாயர்களை ஏமாற்றி முன்னேறும் பிள்ளைகளாய் வைத்துக் கொண்டு தங்கள் சுயநலக்காரியத்தைச் சாதிக்கத் தலைப்பட்டார்கள். கூத்திலே கோமாளி வேடக்காரனுக்கு ஏதேனும் பெருமதிப்புண்டோ? வேட்டைக்கார நாய்கள் அவனுக்கு முன்னோடினாலென்ன பின்னோடினாலென்ன? அவன் குறிப்பின் வழியே நின்று ஓடிப் பிராணிகளைக் கடித்துக்கொன்றாலும் அவைகளுக்கு வாசலிலேதானே சோறு போடுவான். பந்தியிலே கூடவைத்துச்சாப்பிடுவானா? எண்ணித்துணியாததினால் வந்த இழுக்கை இன்னும் அறியாதார் எத்தனையோ பேரிருக்கின்றனர். தம் மானம் அறியாத சாம்பிராணிகளுக்கு இடித்திடித்துச் சொன்னாலும் ஏறுமா? ஏதேனும் சிறிதாவது கெடுபுத்தி மாறுமா?

உய்திபெற ஒரு செய்தி உரைக்கின்றேன் உடன் பிறப்பாளர்களே! கேண்மின்! கேண்மின்!! உலகம் நம்மை உடையவராகிய கடவுளுக்கு உருவம். அதிலுள்ள உயிர்களனைத்தும் உறுப்புக்கள். அறிவு தொழில் இச்சை முதலியவைகள் உட்கரணங்கள். அந்த முறையிலே அகத்தும் புறத்தும் அனைத்துயிரையும் தகுதிக்கேற்ப காலத்தையும், இடத்தையும் ஒப்ப நோக்கி ஒரு பெருஞ் சக்தி நடத்துகிறது. அந்தச் சக்தி இயற்கையேயாகும். அந்தச் சக்தியினிடத்து எள்ளளவேனும் மாறுபாடாவது, பாரபட்சமாவது இல்லவே இல்லை. ஆறறிவுயிர்களாகிய மக்கள் தக்கன இவை, தகாதன இவையென்று பகுத்தறிந்து நடைபெறும் ஒழுங்கிலே பிசகுங்காலத்துப் பீடை உண்டாகின்றது எதையும் ஆழ்ந்த கருத்தோடு ஆராய்ச்சி பண்ணிச்செய்தல் எல்லார்க்கும் அரிது. ஆனால் ஒரு சிலர்க்கு மட்டும் உள்ளது உள்ளபடியே புலப்படும். மற்றையோர்க்கு நாளடைவிலே உணர்ச்சி மிக்குடையாரின் உறவினாலும், அவர்தம் நடைமுறையை நாடி அனுசரித்தலாலும் புலப்படும். அவ்வாறும் புலப்படாத அறிவுடையாரும் சிலரிருக்கலாம். எவ்வாற்றாலும் தம் மானங்காக்கும் தகுதியுடையாரே சாலச் சிறந்தவர். கோலத்தைக் காட்டிக் காலத்துக்கேற்றபடி பாசாங்கு பண்ணி மோசமாக வாழும் மூடமக்களை என்னென்போம்! இத்துணைக் காரியங்களை எண்ணி எண்ணி, அவற்றைச் சீர்திருத்துதற்குரிய உபாயங்களை நண்ணி நண்ணித் திண்ணிய எண்ணத்தோடு திரும்பினர் திருமிகு நாயக்கர். அன்பார்ந்த சகோதரிகளே! சகோதரர்களே!! அவரைப் பின்பற்றுமின்! விடேன்மின்! தொடர்ந்து சென்மின்! காரியநிகழ்ச்சியிலே கருத்தாயிருமின்! வெற்றி நமதே! நிலம், நீர், நெருப்பு, வளியாகிய நான்கு பூதங்களும் நிலை பெயர்ந்து வரினும் திண்ணிய எண்ணமுள்ளார்க்கு எந்நாளும் அச்சமென்பது அணுவளவேனும் உண்டாகவே உண்டாகாதென்பது உண்மை. உண்மை. உலகியல் முறையிலும் சரி அரசியல் முறையிலும் சரி, ஆன்மார்த்த முறையிலும் சரி, எதிலும் அச்சமுடையார்க்கு வெற்றியில்லை என்பது நிச்சயம். ஆதலால் அச்சத்தையும் தம்நல இச்சையையும் துச்சமென்று தள்ளி விடுபவரே சுத்த வீரராவர்.

சுத்த வீரர் தோற்பன தொடரார். தொடாத பொழுது அடாது துன்பம். துன்பம் இன்றியக்கால் இன்பமே என்பது மறுக்க முடியாத வுண்மை. இன்பம் இடையறாது நிகழின் மனக்கவலை என்பது தலைக்காட்டாது. மனக் கவலைதானே பலக்குறைச்சல். சித்தத்தினிடத்தே கழிபேருவகை சேர நித்தலும் மலர்ச்சி முகத்தில் மிக்கோங்க இனியவாம் மொழிகள் வாயினின்றுந் தோன்ற ஏற்றன கொண்டு இடருறாது வாழ்வார் அவர். சுசி நிறைந்த உடலிலே தூய்மை செறிந்த உள்ளத்திலே இருள் நீக்கி இன்பம் பயக்கும் மாசறு காட்சி வந்து தோன்றிக் கொண்டேயிருக்கும். அது எதினால்? பிரிவற நிறைந்திருக்கும் சத்தியினாலே தான். அந்த சக்தியாவது தடையிலா ஞானமாகும். கதிரவனின்றும் வேறுறாத கதிரைப்போல சத்தன் அல்லது சத்திமான் என்னும் கடவுளினின்றும் சத்தி வேறாக விளங்காது. அச் சத்தியை அருள் என்றுங் கூறுவர் பெரியோர். அவ்வருள் அனைபிற்கிணைத்தெழுந்ததேயாம். அருள் என்னுஞ் சத்தி மானிடத்தினின்றும் தோன்றுவதாகவே அருளுக்கு நிலைகளமாகிய அன்பு கடவுளே ஆகும். ஆதலால் கடவுள் என்றும் உள்ளது ஆகிய ஒரே பொருளாம். அதை அவரவர் அறிவின் வரிசிற்கேற்ப பற்பலவகையாகக் கூறுவர். உள்ளது ஒன்றே. அதன் சத்தியும் ஒன்றே. அந்தச் சத்தி தொழில் முறையிலே பலவாய் நிகழும். அந்நிகழ்ச்சியின் ஆதாரத்தை ஆராய்ந்து பார்க்காத குற்றத்தினாலே மக்களுக்குள் பூசல் உண்டாகின்றது. அப்பூசலே மனக்குழப்பத்தைத் தரும்படியான மதக் குழப்பமாகும். மதத்தின் பேரால வந்தன வழக்குகள். கடமைகள் மாறின. கலகங்கள் மீறின. அதினால் மக்களுக்கு இடர்ப்பாடுகளும், இடுக்கண்களும் மேன்மேலேறின. குறைந்தது ஞானம். நிறைந்தது கிரியை. கிரியை மீறவே ஒற்றுமையியக்கம் உருக்குலைந்து போற்று. வேற்றுமை மயக்கம் மீதானத்தினின்றும் தாண்டவமாட ஆரம்பித்தது. பக்கமேளக்காரர் பலத்தினாலே ஆட்டமும் பாட்டமும் அயராமல் நடைபெறலாயின. அவற்றிற்கேற்ற ஆதாரங்களென்று அநேக புனைந்துரைகள் புறப்பட்டன, நம்மவர் "மாற்றார்" என்று நினையாமல் மகிழ்ந்தேற்றுக்கொண்டதிலிருந்து சாதிப்பூசலும் தலை விரித்தாட தக்க சமயம் இதுதான் என்று விதிகள் விதிகள் என்ற விலங்குகளைக் கால்களிலும் கைகளிலும் மாட்டிவிட்டனர். கவலை வந்து புகுந்தது. களங்கம் மனத்தை மறைத்தது. சிறுகச் சிறுக எல்லாம் போய் ஏமாந்திருந்தனர் தமிழ் நாட்டார். வெறும் நம்பிக்கை மட்டும் வீண் வீணே

மனத்தின் ஓர்மையும், நேர்மையும் செவ்வனே உடைய மக்களே மாண்புடையவராவர். திடம்பெற நின்று தத்தம் கடமையை உணர்ந்து நடைபெறும் முறையிலே இடையறா ஊக்கத்தோடு தமக்கும், பிறர்க்கும் சாதகமாயுள்ள வினைகளைத் தகுதிகேற்பச் செய்வதே மக்களை நல்வழிப்படுத்தும் கருவியாகும். இது தான் செய்யத்தக்கது, இதினாலே தான மக்கட் பண்பு வளரும் என்று உணர்ச்சி மிகுந்துடையார் வரையறுத்து வைத்த கடமையே அறமாகும். அறநெறிச் செல்வோர்க்கு அச்சமும், விருப்பமும் உண்டாகவே உண்டாகா. அகத்தும், புறத்தும் தூய்மை வேண்டுவது அவசியம். "புறந்தூய்மை நீரான் அமையும், அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" "தூய்மை என்பது அவாவின்மை, மற்றது வாய்மை வேண்டவரும்" தன்னலங்கருதிப் பிறர் நலம் பேணாது பெரிதும் வருந்தித் தகாத தொழில்களையுஞ் செய்து பலனடைதல் பண்புடையதல்ல. இன்பத்துக்கும் ஹேதுவாகாது. இயற்கைச் சத்தி எந்நாளும் எல்லா மனிதரையும், மற்றப் பிராணிகளையும் இயக்குவித்துக்கொண்டேயிருக்கிறதென்பது உண்மை அவ்வுண்மையை உணர்ந்தவரே உறுதி பயக்கும் வினைகளைச்செய்து உலகத்திற்கு உபகாரிகளாவர். உபகாரத்தின் உளவீடறியாதார் மாக்களைப்போன்றவரே. செந்தமிழ் நாட்டில் அந்தமிலாத அறநிலையங்கள் தலைசிறந்து விளங்கின. அவற்றுள் அந்தணர்க்கும், வறியவர்க்கும், கூன் குருடு முதலிய உறுப்புப் பழுதுடையோர்க்கும், நோயாளிகளுக்கும், வேலை செய்ய வலிமையில்லாது மெலிந்து வந்தடைந்தவர்க்கும், கல்வி பயிலுங்கருத்துடைய ஏழை மாணவர்க்கும் அன்னம் ஆடை முதலிய உதவிகள் கிடைத்துவந்தன. கால வேற்றுமையினாலோ, கவனிப்பின்மையாலோ ஆரியரின் மோசச் செய்கையாலோ மெய்யறம் தலைகீழாக மாறிப் பாவமும், பழியும் பொருந்தும் பான்மையை அடைந்து விட்டது. தொடரும்.

# சென்னை சட்டசபை வரவு செலவு திட்டம்.

## தியாகராய மெமோரியல் கட்டடத்தில் திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் விரிவுரை.

(ஜஸ்டிஸ் கட்சி கொள்கை.)

சென்னை தியாகராய மெமோரியல் கட்டடத்திற்குச் சேர்ந்த காலியிடத்தில் சென்னை சட்டசபையில் வரப்போகும் வரவு செலவு திட்டம் என்னும் விஷயமாய் பேச ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டது. பனகால் அரசர் பாத்ரோ ஆகிய மாஜி மந்திரிகள் உள்பட பல சட்டசபை மெம்பர்களும், ஏராளமான ஜனங்களும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஸ்ரீமான் பி. டி. ராஜன் அவர்கள் அக்கிராசனம் வகிக்க ஸ்ரீமான் கண்ணப்பா அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாய் ஆமோதிக்க அக்கிராசனம் வகித்தார். அக்கிராசனர் கூட்டத்தின் விஷயத்தை விவரித்து ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரை முகவில் பேசும்படி கேட்டுக்கொண்டார். நாயக்கர் பெருத்த கரகோஷத்தினிடையில் எழுந்து பேசியதின் சாராம்சமாவது:—

கனவான்களே! சென்னை சட்டசபையில் உள்ள வரவு செலவு திட்டத்தைப்பற்றி எனக்கு கொஞ்சமாவது கவலை இல்லை. அதில் கவலை செலுத்துவதில் ஏதாவது பிரயோஜனமுண்டாகுமா? என்கிற விஷயத்திலும் அதிகமான பிரயோஜன மிருக்காது என்கிற முடிவுக்கு வந்தவன். ஏழை மக்களிடம் வசூலித்த கோடி கோடியான வரிப்பணத்தை அமலக்காரர்களுக்கு படிக்கொரு ஒழுங்கான உபயோகமும் செய்யாமலேயே வெள்ளைக்காரரும் நமது படித்த கூட்டத்தாரும் எப்படி பங்கு போட்டுக்கொள்ளுவது என்பது தான் பட்ஜட் (வரவு செலவு திட்ட) விவாதம் என்பது எனது முடிவான அபிப்பிராயம். சட்டசபை மாத்திரமல்ல இந்தியா சட்டசபை அரசாங்க சபை ஆகிய சபைகளின் யோக்கியதையைப்பற்றியும் இம்மாதிரிதான் நான் நினைக்கிறேன். பெரிய பெரிய திட்டம் என்பதெல்லாம்கூட இப்படியே ஜாலவேடிக்கையாகத் தான் முடிகிறது. உதாரணமாக மேட்டூர் திட்டம் முதலிய யானைவிழுங்கிப் பிசாசு போன்ற திட்டங்களின் சூதுகளை கவனித்து பார்த்தால் மற்றதுகளைப்பற்றி யாருக்குமே சுலபமாய் விளங்கிவிடும். அத்திட்டங்களால் என்ன லாபம் என்பதை இப்போது தான் தஞ்சை ஜனங்கள் கூட உணர்ந்து வருகிறார்கள். இத்திட்டத்தின் பேரால் கோடிகோடியாய் நமது பணம் வெளி நாட்டிற்கு யந்திரங்களுக்காகவும் சிமெண்டு முதலிய வெளிநாட்டுச்சாமான்களுக்காகவும் லக்ஷ லக்ஷமாக வெளிநாட்டார் உத்தியோகத்தில் சம்பாதிக்கவும் கொள்ளை போகவும் நம் நாட்டு அதிகாரிகளுக்கும் லக்ஷலக்ஷமாய் கொள்ளை போகவுமே உண்டாக்கப்பட்ட திட்டமாய் ஏற்பட்டு விட்டதே என்று எல்லோரும் சந்தேகப்படும்படியாய்விட்டது. இச்சந்தேகங்களுக்கு யாரும் இன்னமும் பதில் சொல்பவரே இல்லை. கோபம் மாத்திரம் வருகிறது. இந்தக்கொள்ளையைப்பற்றி ஜஸ்டிஸ் கட்சியார் பேரிலும் கூடத்தான் ஜனங்கள் குற்றம் சொல்லுகிறார்கள். இவர்கள் ஏன் அதிகாரத்தில் இருந்த காலங்களில் இவற்றை வெளியிட்டிருக்கக்கூடாது? என்பதற்குத் தக்க சமாதானம் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறார்கள். இப்படி கோடி கோடியாய் செலவாகும் பணத்தின் யோக்கியதையே இப்படி இருந்தால் ஆயிரம் பத்தாயிரம் ரூபாய் செலவுகளில் சண்டை பிடிப்பதில் பயனென்ன? நமது நாட்டு பட்ஜட் சண்டையே வெட்கக்கேடான காரியம். எப்படியாவது அரசாங்கத்தார் அவர்கள் பிடித்த காரியத்தைச் சாதித்துக்கொள்வார்கள். இதில் தலையிட்டு சத்தம் போடுவதின் மூலம் நமது படித்தவர்கள் தங்களுக்கு ஒரு பங்கு அதில் கிடைக்க வழி தேடுவதே அல்லாமல் ஜனங்களுக்கு நன்மை செய்வது என்பது பூஜ்ஜியம்தான். பட்ஜட்டில் உண்மையான சண்டை போடுவதென்றால் அரசாங்கச் செலவைக் குறைப்பதன் மூலம் ஜனங்களின் வரியைக் குறைக்கக்கூடியதாயிருக்கவேண்டும். அப்படிக்கு இல்லாமல் வரிவசூல் செய்த பிறகு செலவைக் குறைப்பதற்குச் சண்டை போடுவதில் லாபமென்ன? உதாரணமாக மந்திரி சம்பளம் குறைப்பது என்பதில் சில சண்டை போட்டு விட்டால் பெரிய தேசபக்தர்களாகி விடுகிறார்கள். மந்திரிகள் சம்பளம் குறைக்கப்பட்டால் யாருக்கு லாபம்? சம்பளம் குறைந்ததினால் குடிகளுக்கு ஏதாவது வரி குறைக்கப்படுகிறதா? "சுடு காட்டுக்கு போன பிணம் கட்டையாகவேண்டும். திரும்பி வரமுடியாது" என்பதுபோல் மந்திரிகள் சம்பளம் ஆளுக்கு மூவாயிரம் மூவாயிரம் குறைந்து விட்டாலும் அந்தப்பணத்தினால் இன்னும் இரண்டு உத்தியோகமோ இரண்டோ போட்டு பார்ப்பனர்களுக்கும் படித்தவர்களுக்கும் அந்த பணம் போய்ச் சேரும்படி செய்து விடுவார்களே அல்லாமல் வரி கொடுத்தவருக்கு ஒரு லாபமும் கிடைக்காமல் போவதோடு அந்த உத்தியோகஸ்தர்களையும் திருப்தி செய்ய வழிகள் அதிகம் பணம் செலவு செய்யவேண்டித்தான் வரும். மந்திரிகள் நிறைய சம்பளம் வாங்கினாலாவது சட்டசபையில் தங்களை உபத்திரவிக்கின்றவர்களுக்கு மாதம் 400, 500 கொடுக்கலாம்; அதனால் அவர்களும் பிழைக்கலாம் நான் நேற்று கூட ஒரு விசேஷம் கேள்விப்பட்டேன், அதாவது ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் தங்கள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் தங்கள் கட்சி பிரசாரங்களுக்காக பத்திரிகைகளுக்கு ஆக மாதம் 3000 ரூபாய் கொடுத்து வந்தார்களே அது போல் சில மந்திரிகள் தங்களை சட்டசபையில் உபத்திரவிக்காமல் இருக்கும்படி செய்வதற்காக சில வாயாடி ஆசாமிகளுக்கு மீ 400, 500 கொடுக்கலாமா என்றுகூட நினைத்தார்களாம்! இது பொய்யோ நிஜமோ எனக்கு உண்மைதெரியாவிட்டாலும் வேடிக்கையாகப் பார்ப்போமானால் இதில்தப்பிதமில்லையென்றே சொல்லலாம் என்னவென்றால் ரூ 5333-5-4 வீதம் ஒவ்வொரு மந்திரி மீ சம்பளம் வாங்கி இவ்வளவையும் தானே சாப்பிடுவதற்கு என்ன பாத்தியம்? ஏன்? மற்றவர்களுக்கும் அதில் ஒரு பங்கு கொடுக்கட்டுமே; ஒரு கட்சி மந்திரிகள் தங்கள் பேரில் ஒரு கட்சியார் ஏற்படுத்தும் கெட்ட பேரை மாற்றுவதற்காக பத்திரிகை பிரசாரத்திற்கு ஆளுக்கு மாதம் 1000 ரூபாய் கொடுக்கால், மற்றொரு கட்சி மந்திரிகள் தங்கள் பேரில் கெட்ட பேர் ஏற்படுத்த எண்ணி உபத்திரவம் செய்பவருபவர்களுக்கோ 500, 500 ரூபாயாக கொடுத்து அவைகளை முளையிலேயே கிள்ளி விடுவது பின்னும் லாபகரமான காரியமே அல்லாமல் வேறல்ல தற்கால ராஜீக அரசியல்களில் இதெல்லாம் ஒரு அதிசயமுமல்ல குற்றமும் அல்ல என்றே தோன்றும். ஆனால் இதுகள் ஒரு வழியில் சிறுமையென்றாலும் ஜஸ்டிஸ் கட்சியார் இந்த தர்ம நியாயத்தை நினைத்துக்கொண்டு சும்மா இருக்கக்கூடாது. ஜஸ்டிஸ் கட்சி அதிகார பதவியிலிருந்த காலத்தில் அதன் எதிரிகள் உருப்படியான யாதொரு காரியத்தையும் செய்யவில்லை ஆனாலும் செய்பவர்களையும் கெடுத்துக்கொண்டு தேசம் எப்படியாவது போனாலும்சரி என்று அதிகாரப் பதவிகளை மாத்திரம் கைப்பற்றச்செய்து வந்த பல சூழ்ச்சிகளில் சட்டசபையில் வெறும் கூப்பாடு போட்டு பாமர ஜனங்கள் ஏமாறும்படி பத்திரிகைகளில் விஷப்பிரசாரங்கள் செய்து வந்ததும், அதற்கனுகூலமாக சில அரசியல் பிழைப்புக்காரர்கள் ஒத்தாசை புரிந்து வந்ததும், அதனால் பாமர மக்கள் உண்மை அறியமுடியாமல் போய் ஏமாற்ற மடைந்ததும் நாம் எல்லோரும் நேரில் அறிந்த விஷயமே. அல்லாமல் பொய்ப்பிரசாரத்தின் காரணமாகவே ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த பலர் தங்களை விட வலிதகுதியும் யோக்கியதை, உயர்வு இல்லாதவர்களாலும், தாழ்ந்த சாதாரண மக்களாலும் தேர்தல்களில் தோற்கடிக்கப்பட்டதும், நாம் யாவரும் அறிந்த விஷயமே.

ஆகலால் ஜஸ்டிஸ் கட்சியாரும் இப்போது பதவிக்கு ஏற்பதிலாய் அக்கக்கொள்கையை எடுத்துக்கொள்ளக்கூடாதானாலும் பார்ப்பனக்கூட்டத்தார் செய்தது புரட்டான காரியங்களென்றும் அது தங்கள் தங்கள் சுயநலத்திற்காகச் செய்து வந்த ஆவாரங்களே அல்லாமல் அதில் உண்மையான தேசபக்தியோ நல்ல எண்ணமோ இல்லை என்றும், இவ்வித முயற்சிகள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைத் தடுக்க எண்ணங்கொண்டு செய்த சூழ்ச்சிகள் என்றும், இதை அறியாமல் பாமர மக்கள் ஏமாந்து போய்விட்டார்கள் என்றும் வெளிக்குக் காட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் அதை விட்டு விடாமல் எந்தெந்த கிரமமான வழிகளில் அவற்றை வெளிக்குக் காட்டக்கூடுமோ அந்தந்த வழிகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் விட்டுவிடக்கூடாதென்றே சொல்லுகிறேன். இவ்வித காரியங்களாலும் தேசத்திற்கு ஒரு நன்மையும் ஏற்படாதென்பது உறுதி. ஆனாலும் பொய்யர்களின் யோக்கியதையை வெளிப்படுத்துவதன் மூலமாய் தேசத்திற்கு நன்மைகள் ஏற்படலாம் என்பதை மறுக்கமாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். உதாரணமாக


மந்திரிகளின் சம்பளத்தைக் குறைப்பதில் யாதொருவிதமான லாபம் இல்லையானாலும் நாம் குறைக்கத்தீர்மானம் கொண்டுவந்தாலும் அப்போது பார்ப்பனக் கட்சியாகிய சுயராஜ்யக் கட்சியாரின் யோக்கியதை என்னவென்பதை பாமர மக்கள் அறியச் செய்யலாமல்லவா? அன்றியும் ஸ்ரீமான் சி. வி. வெங்கடரமணய்யங்கார் என்கிற ஒரு அய்யங்கார் பார்ப்பனர் ஸ்ரீரங்கத்தில் சொன்னதாக "சுதேசமித்திரன்" பத்திரிகையில் வெளியாயிருக்கிறபடி பார்த்தாலே பார்ப்பன சூழ்ச்சிகள் இன்னது என்பது யாவருக்கும் விளங்கும். அதாவது:— தாங்கள் மந்திரிகளை எதிர்க்கப் போவதில்லை என்றும், ஏதாவது திட்டங்களை எதிர்த்து சட்டசபையில் வெற்றி பெற்றாலும் அவ்வெற்றியை நிராகரித்துவிட கவர்னருக்கு அதிகாரமிருப்பதாகவும் ஆதலால் அனாவசியமாய் எதிர்ப்பதில் பயனில்லை என்று கருதி மந்திரிகளுடன் ஒருவிதமான ராஜி செய்து கொண்டதாகவும் பேசியிருக்கிறதாக பத்திரிகைகளில் காணப்படுகின்றது. சட்டசபையில் தீர்மானங்களை நிறைவேற்றி வெற்றி பெற்றால் அதை கவர்னர் நிராகரித்து விடலாம் என்கிற விஷயத்தை ஒரு மனிதன் உணருவதற்கு சட்டசபை தேர்தலுக்கு 30000, 40000 செலவு செய்து பொய்யும் புளுகும் சொல்லி பாமர மக்களை ஏமாற்றி ஓட்டுவாங்கி சட்டசபைக்குப்போன பின்புதான் தெரிந்து கொள்வதென்பது யாராவது நம்பமுடியுமா? இந்த உண்மை ஒரு பசு மாடு மேய்ப்பவனுக்கும் கூட தெரிந்திருக்கும். அப்படி இருக்க ஸ்ரீமான் சி. வி. வெங்கடரமணய்யங்கார் அவர்கள் இப்போதுதான் தெரிந்து கொண்டவர்போல் பேசியிருப்பதில் உள்ள புரட்டு யாவருக்குமே எளிதில் விளங்கலாம். அல்லாமலும் மந்திரிகளிடம் பார்ப்பனர்கள் ராஜிசெய்து கொண்டார்களாம். என்ன ராஜி என்று பார்ப்போமானால் "பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு மந்திரிகள் இடையூறாயிருக்கவேண்டும். ஜில்லாபோர்டு முனிசபாலிடி முதலிய ஸ்தானங்கள் பார்ப்பனர்கள் சொல்லுகிறபடி தாங்களும் தங்களுடைய நிபந்தனை இல்லாத அடிமைகளுக்குமே விநியோகிக்க வேண்டும். மந்திரிகளின் ஆதிக்கத்தில் உள்ள உத்தியோக போகங்கள் பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமைகளுக்குமே விநியோகிக்கவேண்டும்—இதற்கு நன்றிகாட்டுவதற்காக மந்திரிகளுக்கெவ்வித இடஞ்சலுமில்லாமல் நடந்துகொள்வதோடு மற்றவர்கள் யாராவது இடஞ்சல்செய்தாலும் தாங்கள் முன்னின்று அதை நிவர்த்தித்துக் கொடுப்பது" என்பது அல்லாமல் வேறு ராஜி என்னமாயிருக்கக்கூடும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். உதாரணமாக மந்திரிமார்கள் போகிற பக்கங்களில் எல்லாம் சுயராஜ்யக்கட்சி ஒத்துழையாமைக்கட்சி முதலியகட்சி பார்ப்பனர்கள் வரவேற்பு அளிப்பதும் அவர்கள் வாலைப்பிடித்துக்கொண்டு பின்னால் திரிவதுமான காரியங்களிலிருந்தே பார்க்கலாம். முன் மந்திரிகளுக்கு எந்த முனிசிபாலிடியாராவது வரவேற்பு செய்தால் "இது யாருடைய பணம்" என்று கேட்பதும் முன் மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்தால் "எதற்காக இப்படி ஏழை மக்கள் பணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள்" இதற்கு செலவு என்ன ஆயிற்று என்று கேட்பதுமாயிருந்தார்கள் முன் மந்திரிகளாவது தாங்கள் தனியாய் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். இப்போதைய மந்திரிகள் நியமனமான காலந்தொட்டு பெண்டு பிள்ளைகள் சம்சார சகிதமாய் (எத்தனை நாளைக்கு இந்தப் பதவி வாழப்போகிறதோ என்கிற கவலையின் பேரில்) மாமியார் வீட்டு விருந்து சாப்பிடுவது போல் ஊர் தவறாமல் சுற்றிக் கொண்டு தங்கள் பதவி நிலைப்பதற்கு ஆங்காங்குள்ள ஆள்களுக்கு நல்ல வார்த்தை சொல்லுவதும், ஸ்தல சுய ஆட்சி முதலிய பதவி உத்தியோகங்கள் கொடுப்பதுமான காரியத்தில் ஈடுபட்டிருப்பதை நீங்கள் யாருமே பார்த்திருக்கலாம். இதற்காக இந்த "தேசியப் பார்ப்பனர்களும்" "முட்டுக்கட்டைப் பார்ப்பனர்களும்" "ஒத்துழையாப் பார்ப்பனர்களும்" ஏதாவது பேசுகிறார்களா? திருடனை தேள் கடித்தது போல் வாயை மூடிக்கொண்டிருப்பதுடன் இவர்களும் இதற்கு உதவி செய்து வருகிறார்கள், இதைப் பார்க்கிறபோது ஸ்ரீமான் சி. வி. வெங்கடரமணய்யங்கார் "மந்திரிகளிடம் ராஜிசெய்துகொண்டோம்" என்று சொன்னதற்கு ஆதாரமில்லாமல் போகவில்லை. நாமும் இவற்றையெல்லாம் அடியோடு கூடாது என்று சொல்ல வரவில்லை. இப்போதைய ஆட்சி முறையில் யார் மந்திரிவேலை பார்த்தாலும் இப்படித்தான் நடக்கச்செய்யும் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் இந்த போகபோக்கியம் பார்ப்பனர்களுக்குத்தான் சொந்தமா என்றுதான் கேட்கிறோம்?— ஆதலால் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் இந்த பார்ப்பனப் புரட்டுகளை பாமர மக்களுக்கு சட்ட சபையின் மூலம் எவ்வளவு தூரம் வெளிப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் வெளிப்படுத்தவேண்டும் என்றுதான் நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கேற்ற நல்ல சமயம் கிடைத்திருக்கிறது. இனி இம்மாதிரி சமயம் கிடைப்பது அரிது. மந்திரிகள் நமக்கு தனி முறையில் சிநேகிதர்கள் என்றோ வேண்டியவர்கள் என்றோ அல்லது பார்ப்பனர்களுக்கு 10 எலும்பு போட்டால் நமக்கு ஒன்றாவது போடமாட்டார்களா என்றோ நினைத்து பார்ப்பனப் புரட்டுகளுக்கு நாம் அனுகூலமாயிருப்பது மிகமிகக் கேவலமும் மானக்கேடும் ஆகும் என்றே சொல்லுகிறேன். இரண்டு மூன்று வருஷ காலத்திற்குத்தான் நாம் உத்தியோகமில்லாமல் இருந்தால் செத்துப்போய்விடுவோமா? ஆயிரக்கணக்கான வருஷ காலமாய் பார்ப்பனர்களால் அழுத்தப்பட்டு கிடக்கும் நாம் நல்ல சந்தர்ப்பம் வந்து பாமர ஜனங்களும் கண்விழித்துக்கொள்ள தயாராயிருக்கும் இச்சமயத்தை சரியானபடி உபயோகித்துக்கொள்ளவேண்டுமென்றே கோருகிறேன். ஸ்ரீமான் பனகால் அரசருக்கும், P. T. ராஜனுக்கும் டாக்டர் சுப்பராய மந்திரிகளிடமும அன்பும் சிநேகமுமிருக்கலாம். அதுபோலவே நமக்கும முதல் மந்திரி விஷயத்தில் ஓர் அபிமானம் (?) ஒரு கொங்குவேளாள மந்திரியாவது கொஞ்ச காலத்திற்கு போக போக்கியமனுபவிக்கட்டுமே என்கிற ஆசை இருக்கலாம் ஆனால் அதைக் காட்ட இது சமயமல்ல. பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே மானக்கேட்டை உண்டாக்கும்படியான நிலைமையை விருத்தி செய்வதற்கு அனுகூலமாயிருக்கும் மந்திரிசபையிடம் இம்மாதிரி சொந்த சிநேகமும் அன்பும் ஆசையும் வைத்து அதை அனுமதிப்பது மிகவும் முட்டாள்தனமான காரியமென்றே சொல்லுவேன். மந்திரிகளின் கொடுமைக்கும் அவர்கள் பார்ப்பனக் கொள்கையையே உடையவர்கள் என்பதற்கும் ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன். தமிழ்நாட்டில் ஒன்று இரண்டு தவிர ஏறக்குறைய எல்லா ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளும் பார்ப்பனரல்லாதாராயிருக்கிறார்கள். இதனால் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு எவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பது அந்தந்த ஜில்லா போர்டுகளில் பார்ப்பனர்கள் பிரசிடெண்டாயிருந்த காலத்தில் எப்படி இருந்தது என்று பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். இப்போது பார்ப்பனரல்லாத பிள்ளைகள் படிக்கவும் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்கள் உத்தியோகஸ்தர்கள் ஏற்படவும் எவ்வளவோ நன்மை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சம்பளமே பிரதானமாயில்லாவிட்டாலும் பார்ப்பனரல்லாதாருக்கும் புத்தி உண்டு மூளை உண்டு என்று ருஜுச் செய்யவாவது சந்தர்ப்பம் கிடைத்தது. இப்போது இதை ஒழிக்கப் பார்ப்பனர்கள் யோசனை சொன்னால் முதல்மந்திரி அதற்கு இடம் கொடுப்பதானால் இதைவிட மோசமாக பார்ப்பனரில்கூட ஒருவரை எதிர்பார்க்கமுடியாது. என்னவெனில் திருநெல்வேலி, தஞ்சை, தென் ஆற்காடு, சேலம், செங்கல்பட்டு ஆகிய ஜில்லாக்களின் ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளுக்கு உத்தியோக காலாவதி ஆனால் மறுபடியும் அவர்கள் தேர்தலில் நிற்பதற்கு யோக்கியதை அளிக்கக்கூட மறுப்பதானால் இம்மந்திரியின் கொள்கையையும் பார்ப்பனரல்லாதார் அபிமானத்தையும் பற்றிச் சொல்ல வேறு என்ன ஆதாரம் வேண்டும்? பொள்ளாச்சி முனிசிபாலிட்டியில் வெகு காலமாய் கட்சிகள் இருந்துவருவதும் அங்குள்ள உத்தியோகஸ்தரல்லாத சேர்மனை எடுத்துவிட்டு உத்தியோகஸ்தர்களே சேர்மனாயிருந்து வந்ததும் யாவருக்கும் தெரியும். இந்த ஊருக்கு உத்தியோகஸ்தரல்லாத சேர்மன் முறை வழங்கும்படி பொதுஜனங்கள் வெகுகாலமாய் கேட்டு வந்தவர்களுக்கு தவளைகள் தங்களுக்கு ராஜாவாக இருக்க மரக்கட்டை வேண்டாம் என்று கேட்டதற்கு பாம்பைக் கொடுத்ததுபோல் திடீரென்று ஒரு பார்ப்பன சேர்மனை நியமிப்பதென்றால்—அதுவும் தனக்கு மீட்டிங்கு நடத்த கோரம்கூட சேர்த்துக்கொள்ள லாயக்கில்லாத அவ்வளவு "செல்வாக்கு" உள்ள ஒரு பார்ப்பனரை நியமிப்பதானால் மந்திரியின் கொள்கைக்கு இதைவிட வேறு பரீட்சை என்ன வேண்டும்? ஜமீன்தார் பிரதிநிதியான மந்திரி யோக்கியதையே இப்படியிருந்தால் மற்ற மந்திரிகளைச் சொல்லவேண்டுமா? மற்றபடி ஒரு கிருஸ்தவப் பிரதிநிதியாய் வந்த மந்திரி

[இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க.]

## உத்தியோக வேட்டை.

நமது பார்ப்பன தலைவர்களாலும் அவர்கள் பத்திரிகைகளாலும் ஜஸ்டிஸ் கட்சியினர் உத்தியோகவேட்டை ஆடுபவர்கள் என்று குறை கூறப்படுகின்றனர். யார் வேட்டை ஆடியபோதிலும் வேட்டையெல்லாம் பார்ப்பனர்களுடைய ஜோபியில் தான் பெரும்பாலும் போய் விழுகின்றன. அவர்களுடைய ஜனத்தொகை 100க்கு 3பேர். ஆனால் அவர்கள் கைப்பற்றியிருக்கும் உத்தியோகமோ 100க்கு 80க்குமேல் இருக்கும். இப்படி கைப்பற்றப்படும் உத்தியோகங்களெல்லாம் ஒழுங்கான முறையில் கைப்பற்றப்பட்டிருக்கிறதாவென்று சற்று கவனிப்போம். இப்பொழுது சட்ட மெம்பராக இருக்கும் கனம். சர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் 1918, 1919ம் வருடங்களில் பெரிய காங்கிரஸ் தலைவராக விளங்கியவர். பிரிடிஷ் கவர்ன்மெண்டைப் பற்றி அமெரிக்கா கவர்ன்மெண்டுக்குக் கடிதமெழுதிய கோஷ்டியைச் சேர்ந்தவர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி பதவியை வகித்தவர். சீமைக்குச் சென்று ஜாயிண்டு பார்லிமெண்டரி கமிட்டியின் முன்பாக இந்தியாவில் வர வர ஜாதி வித்தியாசங்கள் குறைந்து கொண்டு வருவதினால் இப்பொழுது அவ்வளவு ஜாதி வித்தியாசம் இல்லை என்று சாட்சியம் கூறிவிட்டு வரும்பொழுதே இராமேஸ்வரத்திலிறங்கி சீமைக்குக் கடலைக்கடந்து சென்றதற்காக பிராயசித்தம் செய்துகொண்டு சென்னைக்குப் போனவுடன் வைதீகர்களால் பூரண கும்பத்துடன் எதிர்கொண்டழைக்கப்பட்டவர். இவர்தான் உண்மையான ஜனப்பிரதிநிதி. ஏழைகளுக்குப் பாடுபடுகிறவர். (Peoples' Man) என்பதாக சொல்லி விளம்பரப்படுத்திக்கொண்டு சென்னைக் கார்ப்பரேஷனிலும் (Corporation) சட்ட சபையிலும் நுழைந்தார். சட்ட சபையில் நுழைந்ததும் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்ட அட்வகேட் ஜெனரல் பதவியை ஏற்றுக்கொள்ளவேண்டி சட்டசபையிலும் கார்ப்பரேஷனிலும் தனது ஸ்தானத்தை ராஜீநாமா செய்து விட்டார். பிறகு அதிலிருந்து நிர்வாக சபை பதவி ஒன்றை தாவி பிடித்துக்கொண்டார். இந்த நிர்வாக பதவி ஸ்தானம் கெடுவு சமீபத்தில் முடியப்போகிறபடியால் இதற்குப் பிறகு வேட்டை ஆட எந்த வேலைக்கு குறிபார்த்து வைத்திருக்கிறாரோ தெரியவில்லை. இதற்கு முன் ஜாக்கிரதையாக [illegible] கூறினவர்; இதை எந்த பார்ப்பன பத்திரிகையும் கண்டிக்கவில்லை. பிறகு சர். பி. என். சர்மா அவர்களை எடுத்துக்கொள்ளுவோம். இவரும் ஒரு காலத்தில் பெரிய காங்கிரஸ் தலைவராக விளங்கியவர். பஞ்சாப் அட்டூழியத்தில் வைசிராய் பிரபுக்கு வக்காலத்து வாங்கி "வக்கீலாய்" பேசியவர். நம்மை ஆளுபவர்கள் வர்த்தகக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆனதால் அவர்களுடைய கொள்கை கூச்சல்போடுகிறவர்களை எப்படியாவது வசப்படுத்த முயலுவதாகத்தானிருக்கிறது. அதுபோலவே நமது நரசிம்மேஸ்வர சர்மா அவர்களுக்கும் கவர்னர் ஜெனரல் நிர்வாக சபை அங்கத்தினர் பதவி ஒன்று கொடுத்து வசப்படுத்தி விட்டார்கள். சர்மா அவர்கள் இந்த உத்தியோகத்தில் ஐந்து வருடங்களிருந்தும் ஆசைதீரவில்லை. நிர்வாக சபை அங்கத்தினர் பதவி கெடுவு முடிந்ததும் மாதம் 1க்கு ரூபாய் மூவாயிரம் சம்பளத்தோடு கூடிய பதவி ஒன்றை இப்பொழுது கைப்பற்றியிருக்கிறார். திவான் பகதூர் டி. ரெங்காசாரியார் அவர்களை எடுத்துக்கொள்ளுவோம்; ஜனங்களிடத்தில் ஓட்டு பெற்று சட்டசபைக்குள் நுழைந்து இந்த செல்வாக்கின் மூலம் தனது பிள்ளைகளுக்கும் சுற்றத்தார்களுக்கும் பல பெரிய வேலைகளை சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். ஸ்கூல்பைனல் (S. S. L. C.) கூட பாஸ் செய்யாத ஒரு பிள்ளைக்கு தபால் இலாகா சூப்பிரின்டென்டெண்டு வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார் மற்றொரு பிள்ளைக்கு இராணுவ இலாகா மூலமாக சிபார்சு செய்து மாதம் 500 முதல் 600 சம்பளத்துடன் கூடிய பதவி ஒன்றை ஒரு கம்பெனியில் வாங்கிக்கொடுத்திருக்கின்றாராம். மற்றொரு பிள்ளைக்கு பாரி அண்டு கோவில் ஒரு பெரிய உத்தியோகம் வாங்கிக்கொடுத்திருக்கிறாராம் ஒரு பேத்தி புருஷனுக்கு பாரி அண்டு கோவில் சிபார்சு செய்து மாதம் 1க்கு ரூ150 சம்பளமும் தினம் 1க்கு வெளியே போனால் ரூ 4 படி இரட்டை செகண்டுகிளாஸ் படி இவைகளுடன் கூடிய ஒரு உத்தியோகத்தை வாங்கிக்கொடுத்திருக்கின்றார். மேல் கண்ட மூவரும் எந்த பரீக்ஷையும் பாஸ் செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது "சுதேசமித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்காரை எடுத்துக்கொள்வோம்; இவருக்கு பத்திராதிபர் பதவிக்காக மாதம் 1க்கு ரூ1000 சம்பளம்; இவ்விதம் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று 30-வருடத்திற்கு ஒப்பந்தமாம். இவர் பிரமாணப்படியை பெற்றுக்கொண்டு ஜனங்கள் பிரதிநிதியாக தேர்தல் மூலமாக ஸ்தானம் பெற்று டில்லி சட்டசபைக்கு போய்க்கொண்டிருக்கிறார் இப்பொழுது இவர் சகோதரர் ராவ் பகதூர் என். கோபால்சாமி அய்யங்கார் அவர்கள் மாதம் 1க்கு ரூ2500 சம்பளம் பெற்றுக்கொண்டு டில்லி சட்டசபைக்கு ஒரு அங்கத்தினராக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு அங்கு சென்று சட்டசபை விவாதங்களில் சர்க்காருடன் சேர்ந்து ஓட்டு செய்துகொண்டிருக்கிறார். இந்த ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் தனது புத்திரருக்கு ஒரு பெரிய வேலைக்கு அரசாங்கத்தாரிடம் சிபார்சு செய்ததாக ஸ்ரீ பிபின சந்திரபாலர் அவர்கள் "இங்கிலீஷ்மன்" பத்திரிகையில் எழுதியிருந்தார். சென்னையிலும் கல்கத்தாவிலும் தபால் இலாகாவில் மாதம் ஒன்றுக்கு முறையே ரூ10000மும் ரூ18000 மும் தபால்களை ரயிலுக்கு எடுத்துப்போகவும் வரவும் வேண்டிய வேலையை கண்டிராக்டு எடுத்திருக்கும் ஒரு கம்பெனிக்கு ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் ஒரு டைரெக்டராம். இன்னும் இவைகளைப்போல் சொல்வதென்றால் எவ்வளவோ இருக்கிறது. சமீபத்தில் கும்பகோணத்தில் எற்கனவே ஆபீஸிலேயில் 11 பார்ப்பனர்களும் 7 பார்ப்பனரல்லாதார்களும் இருக்கும் நிலைமையில் காலியாக ஏற்பட்ட 3 ஸ்தானங்களுக்கு வெளியூரிலிருந்து வந்து ஒன்றும் பாஸ் செய்யாத 3 பார்ப்பனர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது நிற்க சுயராஜ்யக்கட்சிகாரர்கள் தான் உத்தியோகங்களை திரணமாக மதிப்பதாக சொல்லிக்கொண்டு திரிகிறார்களே. இவர்களுக்கு ஹைகோர்ட்டு ஜட்ஜி பதவிகளைபற்றிய கவலை எதற்காக ஏற்படுகிறது? சமீபத்தில் (Council of state) அரசாங்கசட்டசபையில் ஸ்ரீமான் ராமதாஸ் பந்துலு அவர்கள். சென்னை ஹைகோர்ட்டில் சீப ஜஸ்டிஸ் ஸ்தானத்திற்கு வக்கீலாக இருந்து வந்தவர்களையும் ஜட்ஜுகளையும் நியமிக்கலாமென ஒரு மசோதா கொண்டு வந்து அதை சர்க்காரும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அதைப்பற்றி நமது தேசீய பத்திரிகைகள் வாழ்த்துப்பாடியிருக்கின்றன. சென்னையில் ஹைகோர்ட்டில் காலஞ்சென்ற ஜட்ஜி சர். சி. கிருஷ்ணன் அவர்கள் ஸ்தானத்திற்கு ஒரு வக்கீலை நியமிக்கவேண்டுமென்று சிபார்சு செய்ய ஒரு கூட்டம் கூட்டப்பட்டதென்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் விளம்பரப்படுத்தியிருந்தார் [illegible] இவைகளின் நோக்கத்தை எல்லோரும் நன்றாய் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். இவை [illegible] பதவிகளை பார்ப்பனர்களே [illegible] அடைவதற்கான சூழ்ச்சியேதான் [illegible] இந்த சுயராஜ்யக்கட்சி தலைவர்கள் சொல்லக்கூடும்? வக்கீல்களை இந்தப்பதவிக்கு நியமிப்பதால் நாட்டிற்கு எந்த வகையில் க்ஷேமமுண்டாகப்போகின்றது. வரிகுறையப்போகின்றதா? வறுமை நீங்கப்போகின்றதா? ஏழைமக்களுடைய துன்பங்கள் அகலப்போகின்றனவா? நாட்டிற்கு சுயராஜ்யம் வரப்போகின்றதா? வேறு எதற்காக இவ்விதம் இவர்கள் அலறவேண்டும். எல்லாம் அவர்கள் பிழைப்புக்குத்தான். ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் உத்தியோகங்களிலும் அவரவர்கள் விகிதாசாரப்படி தான் பெறவேண்டுமென்று சொல்லுவதின் முக்கிய நோக்கம் வயிற்றுப் பிழைப்பல்ல. உத்தியோகங்களின் மூலமாகவும் அவர்கள் செல்வாக்கு விருத்தியாவதற்கு எவ்வளவு உதவியாக இருக்கின்றதென்பதை ஊன்றி கவனிப்பவர்கள் உத்தியோகங்களை கைப்பற்ற வேண்டிய அவசியத்தை மறுக்கமாட்டார்கள். ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளில் ஒன்று தீண்டாமை விலக்குவது. மகாத்மா காந்தி அவர்களும் தீண்டாமை விலக்கை வற்புறுத்தினாலும் [illegible] தீண்டாமை கிடையாது. அரசாங்கத்தார் சர்க்கார்காரியாலயங்களில் (Offices) எல்லோரும் சமத்துவமாக நடத்தப்படவேண்டுமென்று வெகு காலத்திற்கு முன்னதாகவே உத்திரவுபோட்டிருக்கின்றார்கள். அப்படிக் இருந்தும் என்ன நடந்து கொண்டு வருகிறது? நியாயம் வழங்க வேண்டியதற்காக ஏற்பட்டிருக்கும் நீதி ஸ்தலங்களிலேயே (Courts) நமது தீண்டப்படாதவர்களாகக் கருதப்படும் சகோதரர்கள் வந்தால், விசே

(இதன் தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)



அன்னத் துயர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுமதானே.

குடி அரசு.

அக்ஷய-ஸ்ரீ பங்குனி-மீ 7-உ

## "சுதேசமித்திரனின்" உபத்திரவம்

"சுதேசமித்திரன்" என்னும் பத்திரிகையைப்பற்றி அதாவது அது பார்ப்பன பத்திரிகையென்றும், அது பார்ப்பனரல்லாதார் முற்போக்குக்கு இடைஞ்சலாயும் பார்ப்பன ஆதிக்கத்துக்கு அனுகூலமாகவும் பார்ப்பனப்பிரசாரம் செய்யும் பத்திரிகை என்பதாகவும் பல தடவைகளில்தாமும் மற்றும் அநேக கனவான்களும் அவ்வப்போது ஆதார பூர்வமாய் வெளிப்படுத்திக் கொண்டேவந்திருக்கிறோம். அதன் நிருபர்களும் அக்கரைத்து உண்மைக்கு மாறாகவும் விஷமத்தனமானதாகவும், பார்ப்பனர் முன்னேற்றத்திற்கு [illegible] பார்ப்பனரல்லாதாருக்கு இழிவும் கெட்டபெயரும் வரும்படியாகவும் அறிக்கை செய்து கொண்டுவருவதைப் பற்றியும் நாம் மாத்திரமல்லாமல் மற்றும் அநேகர்கள் கண்டித்தெழுதி வந்திருப்பதோடு அதை பகிஷ்கரித்து வந்திருப்பதும் வாசகர்கள் உணர்ந்திருக்கக்கூடும். அதுமாத்திரமல்லாமல் அநேக முனிசிபாலிட்டி தாலூகா ஜில்லா போர்டு தலைவர்கள் "மித்திரன்" நிருபரை உள்ளே அனுமதிக்க மறுத்ததும் பார்ப்பன அங்கத்தினர்கள் பிரசாரம் செய்திருப்பதும் அநேக பத்திரிகையில் பார்த்தும் இருக்கக்கூடும். என்ன செய்தும் பத்திரிகையினுடையவும் பத்திரிகை நிருபருடையவும் ஜாதிப்புத்தி கொஞ்சமாவது மாற்றமடைந்ததாகக் காண முடியவில்லை.

கொஞ்ச நாளைக்கு முன் தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டு தேர்தலின் போது நாம் தஞ்சைக்கு போயிருந்த காலத்தில் தேர்தல் முடிந்ததும் தலைவர் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்கள் சில அங்கத்தினர்களோடு கலந்து கூறுகையில் தனியாக நிருபர்களை வெளியில் போகும்படி கேட்டுக்கொண்டு [illegible] கொள்ளக்கூடாது இது பொது விஷயமல்ல என்பதாகவும் சொல்லி சிலவிஷயங்கள் சொன்னார். அதனால் ஒரு பார்ப்பன நிருபர் திருட்டுத்தனமாய் வேஷ்டியை போர்த்துக்கொண்டு உள்ளுக்குள்ளாக குதித்துக்கொண்டு வந்தார். இதை காதை தொழிலாளர் ஸ்ரீமான் திருஞானசம்பந்தம் கண்டுபிடித்து தலைவருக்கு சொல்ல அவர் சேவகனை விட்டு பரிசோதிக்கவிடவும் திருட்டுத்தனமாய் புகுந்துகொள்ளப்பட்டது தெரிந்தது. அதுவும் விஷமத்தனமாய் குறிக்கப்பட்டிருந்தது. இதைப்பார்த்து அங்குள்ளவர்கள் அவரை இகழ்ந்து வெளியாக்கி விட்டார்கள். இதுபோலவே கொஞ்சமாவது மானம் வெட்கம் கண்ணியம் என்பது இல்லாமல் ஒவ்வொரு விஷயங்களிலும் இந்தக் கூட்டம் உபத்திரவம் செய்து வருவது மறுக்க முடியாது. சமீபத்தில் கோயமுத்தூர் முனிசிபாலிடியில் சேர்மனுக்கு பல கௌரவம் இருக்கிறது; இதில் எதையாவது விட்டுவிடவேண்டும் என்கிற தத்துவமடங்கிய ஒரு தீர்மானத்தை இரண்டு பார்ப்பனர்கள் கொண்டு வந்த சமயத்தில் நடந்த விவாதங்களை தப்பாய்ப் பிரசுரித்தார்கள். அதாவது — கவுன்சிலர்கள் சேர்மனைப் பற்றிப் புகழ்ந்து பேசுகையில் "என் முன்னிலையில் என்னைப்புகழ்வது எனக்கு வெட்கமாயிருக்கிறது என்றும், இனியாரும் தயவுசெய்து என்புகழ்ச்சியைப்பற்றிப் பேசாதீர்கள் என்றும், குற்றத்தை மாத்திரம் எடுத்துச்சொல்லுங்கள் திருத்துவதற்கு முயற்சிக்கிறேன்" என்றும் கண்ணியமாய்ச் சொன்ன வார்த்தையை கண்ணிய அபிப்பிராயம் கெடுக்கும்படி எழுதாமல் என்னை இம்மாதிரி அவமானப்படுத்தவேண்டாம் என்று கெஞ்சினது போல் குறிப்பிட்டிருக்கிறதும், இன்னும் இப்படி பலவிதங்களில் உண்மையில் அந்தக்கூட்டத்தில் நடந்த விவாதத்தில் ஸ்ரீமான் முதலியாரை யாரும் இகழ்ந்து பேசியதாகவும் அப்பத்திரிகையிலும் குறிக்கவில்லை.

இப்படி இருக்க இப்படி பொருள்படும்படி சொன்னார். அப்படி நினைக்கத்தக்க மாதிரி சொன்னார் என்பதாக இவைகளுக்கு [illegible] சமாதானமும் எழுதுகிறார்கள். ஆகவே நமது பாமர மக்கள் இம்மாதிரி விஷமப் பிரசாரங்களைப் படித்துவிட்டு தங்களுடைய பரிசுத்தமான மனதை விஷமாக்கிக்கொண்டு விடுகிறார்கள். இந்த விஷமங்கள் பெரும்பாலும் ஜில்லா தாலூகா போர்டு விஷயங்களிலேயே செய்யப்படுகிற காரணம் பார்ப்பனரல்லாதார் செல்வாக்கை ஒழிக்கப் பார்ப்பனர் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே. ஆதலால் இனி இம்மாதிரி விஷயங்களை நிறுத்தச் செய்ய வேண்டுமானால் ஜில்லா, தாலூகா போர்டு முனிசிபல் தலைவர்கள் ஒன்று கூடி இம்மாதிரிபார்ப்பன நிருபர்களின் இடைஞ்சல்களிலிருந்து தப்பவும், பார்ப்பன பத்திரிகைகளின் விஷமப்பிரசாரத்திலிருந்து தப்பவும் வேண்டிய ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு யோக்கியமாய் நடந்து கொள்ளுகிற ஜவாப்தாரி தனத்தின்மேல் இவர்களை உள்ளே அனுமதிக்கவும் கவுன்சில் இவர்கள் நடவடிக்கை ஒன்று இரண்டு மூன்று எச்சரிக்கைகளுக்குப் பிறகும் திருத்தப்படாவிட்டால் அடியோடு உள்ளே விடப்படாமலிருக்கவும் முடிவு செய்துகொள்ளவேண்டும். நிருபபார்ப்பனருக்கு இருக்கும் பொது நன்மைக்கு இருக்கின்றது என்று எழுதி எந்த மனிதனும் நினைக்கமாட்டான். திருட்டுப் புரட்டு நடக்கும் பொதுஸ்தானங்களை இந்தப்பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு அநுகூலமாயிருந்தால் வெளியிடவும் மாட்டார்கள். ஆதலால் இதற்கு யாரும் பயப்படாமல் நமது சமூகத்தின் நன்மையையும் நாட்டின் பொது க்ஷேமத்தையும் கருதி இதற்கு ஏதாவது ஒரு முறையை தைரியமாய் கைக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறோம்.

## பார்ப்பனர்களின் புரட்டுக்கட்டை புளுக்குட்டி வெளியாகி விட்டது.

சென்னை மந்திரிகள் சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பனர்களும், "ஒத்துழையாமை" பார்ப்பனர்களும் தங்களுக்கு உள் உளவாய் இருக்கிறார்கள் என்கிற தைரியத்தினால் அதற்கு ஒரு விதமாய் தலைவிரித்தான் கோலமாய் உளறிக்கொண்டு வருகிறார்கள். "கன்னு பின்னு காவலாயே கூவலாயே உங்களப்பன் வீட்டுப் பெருச்சாளி" என்னும் உளறலை ஒரு விறகுத் தலையன் பாடஞ் செய்துகொண்டு, ஒரு சமஸ்தானத்திற்குப் போய் இதைக்கவி என்று சொல்லி பரிசுகேட்டதாகவும், அங்கு இந்த விறகுத் தலையனுக்கு அநுகூலமாயிருந்த ஒரு வித்வான் இதற்கு வியாக்கியானம் செய்து பரிசு பெற உதவியாய் இருந்ததாகவும் தமிழ் இலக்கியத்தில் ஒரு கதை உண்டு. அதைப்போல் மந்திரிகள் உளறலுக்கு சுயராஜ்யக் கட்சியார் அதாவது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் வியாக்கியானம் செய்து அவர்கள் பதவி நிலைக்க மந்திரிகளை மெச்சி நற்சாக்ஷி பத்திரம் அளிக்கிறார்.

உதாரணமாக, ஒரு மந்திரி ஒரு ஊரில் படிப்படியாகத்தான் குடியை ஒழிக்க முடியும் என்றும் மற்றொரு மந்திரி, குடிப்பது சரியா என்பதைப் பற்றியே தான் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லையென்றும், மற்றொரு மந்திரி பணத்திற்கு என்ன செய்வதென்றும் பேசியவைகள் எல்லோருக்கும் தெரிந்ததே. இதைப்பற்றி வரவு செலவு திட்ட விவாதத்தில் "ஜஸ்டிஸ்" கட்சியார் எடுத்துச் சொன்ன போது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் உடனே வக்காலத்து வாங்கிக்கொண்டு சமாதானம் சொல்லவந்துவிட்டார்கள். அதாவது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் "கவர்ன்மெண்டு முறையால் எங்களுக்குள்ள அதிருப்தியைக் காட்டிக் கொள்ளப் போகிறோமல்லாமல் (மந்திரி பேரில் நாங்கள் குற்றம் சொல்ல இடமில்லை)" "இப்பொழுது இருக்கும் மந்திரி சபை ஜஸ்டிஸ் கட்சியாருக்குப் பிடிக்காததால் அதைத் தோற்கடிக்கப் பார்க்கிறார்கள்." ஆனால் (நாங்கள் அதற்கு இடங் கொடுக்காமல் அதை நிலை நிறுத்துவோம்.)

"ஜஸ்டிஸ் கட்சியார் இந்த மந்திரி சபையைத் தோற்கடித்துவிட்டுத் தாங்கள் மறுபடியும் அதிகாரமடையப் பார்க்கிறார்கள்." ஆதலால் (நாங்கள் இந்த மந்திரிகளை எதிர்

க்க முடியாது. உதவி செய்து தான் தீருவோம்) "இப்போதிருக்கும் மந்திரிகள் வெளியிட்டிருக்கும் கொள்கை முற்போக்கானதாக விருக்கிறது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் இப்போதைய மந்திரிகள் மதுவிலக்கு விஷயத்தில் கஷ்டமிருப்பதாகச் சொல்லுவது எங்களுக்கும் தெரிகிறது. பணத்திற்கு வழி தேட வேண்டும் திருட்டுத்தனமாக மதுவியாபாரம் தடுக்க வழி தேட வேண்டும்". (இது இரண்டும் செய்யாமல் மதுவிலக்கு என்பது முடியாதகாரியம்) "இந்த மந்திரி சபையைக் கவிழ்த்துவிட நாங்கள் இப்போது சம்மதிக்கமாட்டோம்" "அதற்குத் தகுந்த காலம் எங்களுக்குத் தெரியும்" (அதாவது இம்மந்திரிசபை கவிழ்ந்ததும் நாங்கள் அதை அடையக்கூடிய சமயம் எதுவோ அது தான்) என்று பேசியிருக்கிறார். இது "சுதேசமித்திரன்" பத்திரிகையிலேயே இருக்கிறது.

குறிப்பு;—

" " இவ்வடையாள மிட்டது ஸ்ரீமான் மூர்த்தியவர்கள் பேசியது. ( ) இவ்வடையாளமிட்டது அதில் தொக்கியிருப்பது. ஆகவே பார்ப்பனர்களின் கூட்டுக்கட்டையும், இரட்டை ஆட்சியை ஒழிக்குந்தன்மையும், வகுப்பு துவேஷமில்லாமல் தேசநன்மைக்குச் சட்டசபையில் இவர்கள் வேலை செய்யும் பொது சேவையும் இதிலிருந்தாவது விளங்கவில்லையா? இதுபோலத்தான் இவர்கள் இனிவரப்போகும் முனிசிபாலிட்டி டிஸ்ட்ரிக்ட் போர்டு முதலிய தேர்தல்களிலும் மக்களை ஏமாற்றி ஆதிக்கம் பெறப் பார்ப்பார்கள் என்பதைப் பாமர ஜனங்கள் உணர வேண்டும்.

## குடி நிறுத்தும் யோக்கியர்கள்

ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் குடி நிறுத்தும் போரால் தன் இனத்தாராகிய ஸ்ரீமான் சி.வி. வெங்கடரமணய்யங்காருக்கு ஓட்டுவாங்கி கொடுக்க பிரசாரம் செய்தகாலத்தில் ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் குடியை அடியோடு உடனே நிறுத்திவிடப் போகிறார் என்றும், அவருக்கு ஓட்டுக்கொடுங்களென்றும் அவர் மார்பில் முட்டி தொங்கினதைப் பார்த்த பிறகுகூட கிராமம் கிராமமாய்த் திரிந்து பிரசாரம் செய்ததும், இதற்காக மகாத்மா காந்தியின் சிபார்சு கூட வாங்கினதும் வாசகர்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது. ஆனால் இப்போது ஸ்ரீமான் வெங்கடரமணய்யங்கார் சட்ட சபையில் என்ன செய்கிறார் என்று பாருங்கள். குடியை உடனே ஒழிக்க விரோதிக்கிறேன் என்றவர் 10 வருஷத்தில் ஒழிய வேண்டும் என்று விரும்புவதாகவும், அதற்குத் தகுந்தபடி மந்திரிகள் வேலைசெய்தால் போதுமென்றும் ஆனால் இதற்காகவேண்டி இப்போதிருக்கும் மந்திரியைத் தோற்கடிக்கவோ கவிழ்க்கவோ விடமாட்டோமென்றும் பேசி இருக்கிறார். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் ஓட்டு வாங்கி கொடுத்த பார்ப்பன கனவானின் யோக்கியதையும் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியால் ஏமாற்றப்பட்ட மகாத்மா காந்தியின் சிபார்சு பெற்ற பார்ப்பன கனவானின் யோக்கியதையும் இப்படி இருக்குமானால் மற்றபடி ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் பணத்தாலும் பிரசாரத்தாலும் ஓட்டுப்பெற்ற கனவான்களின் யோக்கியதையை நாம் சொல்லவேண்டுமா? இதை அறிந்த பிறகாவது இவர்களுக்கு சிபார்சு செய்த பார்ப்பனர்கள் ஏதாவது பேசுகிறார்களா? அல்லது இவர்களை திருத்தவாவது முயலுகிறார்களா? ஒன்றுமில்லாமல் "[illegible]" என்பதுபோல் ஒன்றும் தெரியாதது போல் [illegible] போட்டுக்கொண்டு "காந்தி வாழ்கிறார் பணம் கொடு" "காந்தி வருகிறார் பணம் கொடு" என்று அலைவதைத்தவிர வேறு என்ன? ஆகவே இந்த பார்ப்பனர்களின் தேசபக்தி கூட்டுக்கட்டை, மது ஒழித்தல், பாவாயி கருப்பாயி சம்பாஷணை கோடுகட்டியதுடன் ஆகியதுகள் எல்லாம் சுயமரியாதையும் சுக்கிர உணர்ச்சியுமுள்ள பார்ப்பனரல்லாதார் [illegible] காங்கிரஸ் ஆதிக்கம் பெறுவதும் முடியாவிட்டால் தங்களது அடிமைகளான சுயமரியாதையும் சுதந்திரமும் அற்ற அசடர்களைக்கொண்டு பத்து வைத்து தங்கள் காரியங்களையும் சாதித்துக்கொள்ளவும் அப்பதுமல்லாமல் வேறு என்ன என்பதைப் பார்ப்பனர்களில் சில பார்ப்பனர்களாவது யோக்கியர்கள் இருப்பார்கள் ஆனால் அவர்கள் இதைக் கும்பிரபுக்கள் உணர்வார்களாக.

## ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர்

ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கரவர்கள் 18-3-27 தேதி இரவண்டியில் திருச்சிக்குச் சென்று 19-உ திருச்சி 20-உ திருவாரூர், 21-தேதி நாகம்பாடிக்குப் போய் விட்டு 22 தேதி மாயவரம் வழியாய்ப் புறப்பட்டு 23-ந் தேதி சென்னைக்குப் போய் பார்ப்பனீயப் புரோகித பஹிஷ்கார சங்கத்தில் தலைக்கப் பிரசங்கம் செய்வார். 24, 25, 26 தேதிகளில் ஈரோட்டிலிருந்து விட்டு 27 தேதி புறப்பட்டு அருப்புக்கோட்டைக்குப் போவார்.

## திருவண்ணாமலை கோவில் கேசு.

திருவண்ணாமலை கோயிலில் ஸ்ரீமான் கண்ணப்பரை தரிசனத்திற்கு உள்ளே விடமாட்டோம் என்று கோவிலதிகாரிகள் தடுத்ததாக ஸ்ரீமான் கண்ணப்பர் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கொடுத்திருந்த பிராது வேறு கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென்று கலெக்டரிடம் விண்ணப்பம் போட்டிருக்கிறார்.

அவ்விண்ணப்பத்தில் காட்டியிருக்கும் காரணத்தின் சாராம்சம் என்னவென்றால் இக் கேசு பார்ப்பன—பார்ப்பனரல்லாதார் உரிமையைப் பற்றியதாகலால் பார்ப்பன மேஜிஸ்ட்ரேட்டோ அல்லது பார்ப்பனரல்லாத இந்து மேஜிஸ்ட்ரேட்டோ விசாரிக்கக் கூடாதென்றும் இரண்டு வகுப்புக்கும் பொதுவான ஒரு மகமதிய மேஜிஸ்ட்ரேட்டோ கிறிஸ்தவ மேஜிஸ்ட்ரேட்டோ விசாரிக்க வேண்டுமெனபதேயாகும்.

## செங்கல்பட்டு ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்.

செங்கல்பட்டு ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் இம்மாதம் 14-தேதி நடந்ததில் ஸ்ரீமான் எம். கே. ரெட்டியாரவர்களும் சி. முத்தையா முதலியாரவர்களும் அபேக்ஷகர்களாக நின்றதில் ஸ்ரீமான் எம். கே. ரெட்டியாருக்கு 24 ஓட்டுகளும் ஸ்ரீமான் சி. முத்தைய்யா முதலியாருக்கு 11 ஓட்டுகளும் கிடைத்து ஸ்ரீமான் ரெட்டியார் தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார்.

இத்தேர்தல் விஷயமாய் சமது பார்ப்பனர்கள் ஸ்ரீமான் முதலியார் அவர்களைப் பிடித்து கோர்ட்டில் விவகாரம் செய்யச் செய்வார்கள். ஏனெனில் ஸ்ரீமான் ரெட்டியாரின் நிர்வாகத்தில் பார்ப்பனர்களுக்கு தனி மரியாதை கிடையாது. ஆதலால் அவர் மறுபடியும் வெற்றி பெற்றது பார்ப்பனர்களுக்கு திருப்தி அளிக்காததோடு தங்களால் கூடுமான அளவு உபத்திரவம் செய்யாமலும் இருக்க முடியாது.

## தொழிலாளர்கள் தற்கால காங்கிரஸ் தலைவர்களை நம்பக்கூடாது; அதில் சேரவும் கூடாது.

1926-ஆம் டிசம்பர்-மீ 14-ந் தேதி வெளியான சுதேசமித்திரன் பத்திரிகையில் 14-வது பக்கத்தில் தொழிலாளர் பிரதிநிதித்துவமென்ற தலைப்பின்கீழ் ஸ்ரீமான் ஆர். சபாபதி முதலியார் ஒரு விஷயம் எழுதியிருக்கிறார். இவர் யாரென்றும் எந்தக் கட்சியை சார்ந்தவரென்றும் எனக்குத் தெரியாது போனாலும் இவர் தொழிலாளரைப்பற்றி எழுதியிருக்கும் அபிப்பிராயத்திற்கு சில விஷயங்கள் கூற விரும்புகின்றேன். சென்னை சட்ட சபையில் தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று சென்னையிலிருக்கும் தொழிலாளராகிய ஸ்ரீமான் பஞ்சாக்ஷர ஆச்சாரி, தொழிலாளி அல்லாதாராகிய ஸ்ரீமான் பி. [illegible] ஆகிய இருவரையும் கேட்டுக்கொண்டு கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்யனுப்பியதாகவும் அதை கவர்ன்மெண்டார் நிராகரித்துவிட்டதாகவும் இதைப் பற்றி தொழிலாளர் வருத்தப்படக்கூடாதென்றும் தொழிலாளர்கள் சட்ட சபைக்கும் கார்ப்பரேஷனுக்கும் போகவேண்டுமேயானால் காங்கிரஸால்தான் போகவேண்டும். அதுதான் தொழிலாளர்களுக்கு ஸ்தானம் கொடுக்குமே தவிர வேறெதுவும் நம்மை காப்பாற்ற முன்வரப் போவதில்லையென்றும், தொழிலாளர் விஷயத்தில் வேறெந்த பத்திரிகைகளும் கிளர்ச்சி செய்வதில்லையென்றும், சுதேசமித்திரன் ஒன்றுதான் கிளர்ச்சி செய்து வருவதாகவும் இனி தொழிலாளர்கள் காங்கிரசையும் காங்கிரஸ் வாதிகளையும் கைவிடாதீர்கள் என்றும் எழுதியிருக்கிறார். இந்த சென்னை கவர்ன்மெண்டார் தொழிலாளர்களுடைய சிபார்சை நிராகரித்துவிட்டது தொழிலாளர்களை கவர்ன்மெண்டார் அவமானப்படுத்தியதாகும். எப்படியென்றால் சென்னை சட்ட சபையில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கும்போது சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் தொழிலாளர்களால் பொது ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் எவ்வளவோ நன்மைகளும் சௌகரியங்களும் ஏற்படுத்திக்கொடுக்கும் தொழிலாள வீரர்களை பெண்களுக்கும் கேவலமாக நினைத்து நமது மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் கொடுக்காததினால் தொழிலாளர்களுக்கு ஒரு அவமானமென்றே சொல்லுவேன். நமது மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் இப்பொழுது நம் தேசத்தில் தொழிலாளர்களுடைய இயக்கம் எப்படி இருக்கிறதென்று அறிந்தோ

அறியாமலோ சட்டசபையில் பிரதிநிதித்துவமில்லையென்று சொல்லிவிட்டார். இதைப்பற்றி தொழிலாளர்களுக்கு வருத்தமும் கிடையாது. மேலும் தொழிலாளர்கள் கார்ப்பரேஷனுக்கும் சட்ட சபைக்கும் போகவேண்டுமானால் காங்கிரஸ்காரர்களை கைவிடக்கூடாதென்றால் தொழிலாளர்கள் எப்படி காங்கிரஸ்காரர்களை ஆதரிக்கமுடியும்? ஒரு தொழிலாளி முனிசிபல் எலெக்ஷனுக்கு அபேக்ஷகராய் நின்றால் காங்கிரஸ்காரர்கள் அவருடன் போட்டியாய் எதிர்க்காமல் விலகி விட்டுக்கொடுத்திருக்கிறார்களா? இவர்கள் மகாத்மாஜியுடைய சட்டதிட்டங்களுக்குட்பட்டு நடந்திருக்கிறார்களா? இவர்கள் மகாத்மாஜியுடைய சட்டங்களுக்கு விரோதமாய் திட்டங்களை ஏற்படுத்திமகாத்மாஜியை உபத்திரவித்ததினால் அவர் கொஞ்ச காலமாய் காங்கிரசில் தலையிடாமல் ஓய்வு எடுத்து ராட்டையே துணையென்று ஆசிரமத்தில் உட்கார்ந்துகொள்ளவில்லையா? நம் தாய்நாட்டில் காங்கிரஸ் மகாசபையென்று ஏற்படுத்தி 38 வருஷம் வரையில் எந்த சீர்திருத்தத்திலாவது காங்கிரஸ் மகா சபையிலாவது தொழிலாளர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்திருந்தார்களா? சர்க்காரையாவது கேட்டிருக்கிறார்களா? 39வது காங்கிரஸ் மகாசபை பெல்காமில் மகாத்மாஜியின் தலைமையின்கீழ் கூடும்போது சென்னை தமிழ் மாகாண காங்கிரஸ் தலைவர்கள் சிபார்சின்பேரில் மகாத்மாஜி தமிழ்மாகாணத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஸ்தானம் கொடுத்திருக்கிறார்கள். அதே சுதந்தரத்தை நெடுகலுமுடைய நாகை ரெயில்வே தொழிலாளர்கள் சென்னையில் நடந்த 32வது தமிழ் மாகாண மகாநாட்டில் காங்கிரஸ் மகாசபைகளில் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்டதற்கு தற்கால காங்கிரஸ் தலைவர்கள் ஏதோ அனுதாபம் காண்பிப்பதுபோல் தொழிலாளர் விஷயங்களில் கண்ணைத் துடைத்துவிட்டார்கள். அதில் 3வது தீர்மானத்தில் தீண்டாமையை விலக்க காங்கிரசுக்கு சிபார்சு செய்யப்போகிறார்களாம்; 8வது தீர்மானத்தில் தொழிலாளர் முன்னேற்றத்திற்காக அஸாம் காங்கிரசுக்கு சிபார்சு செய்யப் போகிறார்களாம். 39வது காங்கிரஸ் மகா சபையிலேயே தொழிலாளர்களுக்கு சுதந்திரம் கொடுத்திருக்கும்போது இப்பொழுதிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் தொழிலாளர்களுக்காக ஆசை வார்த்தை கூறுவதுபோல 41வது வருஷம் கூடும் அஸாம் காங்கிரஸ் மகாசபைக்கு சிபார்சுசெய்யப் போகிறார்களாம்; ஆகவே தற்கால காங்கிரஸ் தலைவர்களே இம்மாதிரி தொழிலாளர்களைப் பற்றியும் பஞ்சமர்களைப்பற்றியும் அலக்ஷியமாயும் அறியாமலுமிருந்தால் எப்படி கவர்ன்மெண்டார் சட்டசபைகளில் தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பார்கள்? ஆகையால் இம்மாதிரி இருக்கும் தற்கால காங்கிரஸ் தலைவர்களை எப்படி நாம் ஆதரிப்பது? மேலும் "சுதேசமித்திரன்" பத்திரிகைதான் தொழிலாளர்களை ஆதரிப்பதாகவும் மற்ற பத்திரிகைகள் கிளர்ச்சி செய்வதில்லையென்றும் என் நண்பர் ஸ்ரீமான் ஆர். சபாபதி முதலியார் சொல்லியிருக்கிறார். [illegible] 3 மாதங்களுக்குமுன் நாகையில் நடந்த ரயில்வே தொழிலாளர் போராட்டத்தைப்பற்றியும் பெங்களூர் மில் தொழிலாளர் வேலைநிறுத்தத்தைப்பற்றியும் "மித்திரனை"த்தவிர வேறு பத்திரிகைகள் கிளர்ச்சி செய்யவில்லையா? சென்னை மாகாணத்தில் "மித்திரன்" பத்திரிகை ஒன்றுதானிருப்பதாகவும் இதைத்தவிர இம்மாகாணத்தில் வேறுபத்திரிகைகள் இல்லைபோலும். மித்திரன் ஒன்றைத்தான் இவர் படிப்பதாகவும் மற்ற பத்திரிகைகளை பார்ப்பதில்லையென்றும் இவர் வியாசத்தைப் பார்க்கத் தெரியவருகிறது. நம் மாகாணத்தில் எத்தனையோ ஆங்கிலம் தமிழ் பத்திரிகைகள் இருக்கின்றனவே இனி இந்தப்பத்திரிகைகளையும் நன்றாய் வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிற்க நானும் தென் இந்தியா ரயில்வே அதிகாரிகளிடத்தில் 11 வருஷம் தொழிலாளியாய் அடிமைத்தனத்தில் இருந்தவன். 1927-ளு ஆகஸ்டு-மீ 1-தேதியில் கம்பெனியிலிருந்து விடுதலையடைந்தவன். காங்கிரஸ் விஷயமும் எனக்கும் சற்று தெரியும். தேசவிடுதலைக்கு காங்கிரசுக்காக மகாத்மாஜியால் ஏற்பட்ட திட்டங்களை ஏற்றுக்கொள்ளலாமேதவிர, இப்பொழுதிருக்கும் காங்கிரஸ் தலைவர்களின் திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியே என் நண்பர் ஸ்ரீமான் ஆர். சபாபதி முதலியார் சொல்லுகிற பிரகாரம் ஏற்றுக் கொண்டாலும் அதனாலும் தொழிலாளர்களுக்கு யாதொரு அனுகூலமும் கிடைக்காது. ஆகையால் எனது அருமையான தொழிலாள சகோதரர்களே தன் தன் கஷ்டங்களை தாங்களே உணர்ந்து நம் தொழிலாளர்கள் சுதந்திரத்திற்கும் தேசவிடுதலையடையவும் பாடுபடவேண்டும். தொழிலாளி இல்லையேல் உலகமில்லை என்று எல்லோருக்கும் தெரிந்ததே. இதனால் எனக்கு என்ன தோன்றுகின்றதென்றால் இனி வரப்போகும் காலத்திற்கு மகாத்மாகாந்திஜி அவர்களும் காங்கிரசை விட்டு விலகிநிற்கும் மற்ற வரதராஜுலு நாயுடு, நாயக்கர், முதலியார் போன்ற தேசபக்தர்களும் காங்கிரஸ் இயக்கத்தில் தலையிட்டு தலைமைவகித்து காரியங்களை நடத்துவார்களேயானால் மாத்திரம் தேசத்திற்கும் தொழிலாளர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் ஏதாவது நன்மை ஏற்படுமே தவிர எனது அன்பர் ஸ்ரீமான் ஆர் சபாபதி முதலியார் சொல்லுகிற பிரகாரம் தற்கால காங்கிரஸ் காரர்களை நம்புவதால் தொழிலாளர்களுக்கு யாதொரு அனுகூலமும் கிடையாதென்று உறுதியாகச்சொல்லுவேன். நான் காங்கிரசை தூஷிக்க முன்வரவில்லை. நான் எழுதியிருக்கும் வியாசத்தில் ஏதாவது குற்றம் குறையிருந்தால் காங்கிரஸ் தலைவர்களாவது அல்லது கவர்ன்மெண்டாவது என்னை மன்னிக்க வேண்டுவதில்லை. என் அருமை தொழிலாள சகோதரர்கள் மட்டும் குற்றமிருந்தால் என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் என்று போத்தனூரிலிருக்கும் ஜனப் சேக்ஷாவர் எழுதுகிறார்.

பத்திராதிபர் குறிப்பு:—தொழிலாளர்கள் காங்கிரசில் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறவரை அவர்கள் உலகத்தாராலும் அதிகாரிகளாலும் முதலாளிகளாலும் மனிதர்களாகப் பாவிக்கப்படமாட்டார்கள் என்பது தான் நமது முடிவும்; இதைப் பல இடங்களில் சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறோம். சமீபத்தில் சென்னை சட்டசபைக்கு ஒரு தொழிலாளியை நியமிக்க சர்க்கார் பிரயத்தனப்பட்டதில் அப்பதவிக்கு மூன்று பேர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. ஒருவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர் சொல்படி நடப்பாரோ, தொழிலாளிக்கு ஒரு நன்மையும் செய்யமாட்டாரோ என்பதாக சந்தேகித்து சில தொழிலாளர்கள் ஆக்ஷேபித்ததினால் அவர் பெயர் அடிக்கப்பட்டது. மற்றவர் [illegible] கட்சியைச் சேர்ந்தவர் [illegible] ஆக்ஷேபித்ததால் அவர் பெயர் அடிக்கப்பட்டது. மற்றவர் பார்ப்பன அதிகாரிகளுக்கு திருப்தி இல்லாததால் அவர் பெயர் அடிக்கப்பட்டது. ஆதலால் இனியாவது தொழிலாளருக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமானால் தொழிலாளருக்கு ஓட்டு கொடுத்து அவர்களால் தெரிந்தெடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமே அல்லாமல் பார்ப்பனர் தயவில் சட்டசபைக்குப் போகலாம் என்பது முடியாத காரியம். போனாலும் பார்ப்பனர்கள் சொல்படி ஆடத்தான் முடியும். ஆனால் பார்ப்பன காங்கிரசோ தொழிலாளர்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க சம்மதிக்காது. ஏனெனில் தங்களுடைய நன்மைக்கு தொழிலாளர்களை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறவர்கள்; எனவே இவர்கள் உண்மையில் தொழிலாளர் பிழைக்க இடம் கொடுப்பார்களா?

---

## பார்ப்பனீயம் ஒழித்த சடங்கு.

மாசி மீ 26-தேதி புதன்கிழமை காரைக்குடி முத்துப்பட்டணம் திருவாளர் சா. சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தனது மனைவியின் சவண்டிச்சடங்கைப் 'பிராமணீயம் ஒழிந்த முறையில் நடாத்தினார். அன்று ஸ்ரீ காந்தி ஆசிரமத்தாருக்கும் காந்தி வித்யாலயம் இராமநாதன் கலாசாலை இவைகளின் மாணவமாணவிகட்கும் ஆடையளிக்கப்பட்டது. திரு செட்டியார் அவர்கள் நூற்றுக்கணக்கான ஏழை மக்கட்கு அன்னம் அளித்தார். அன்னப்படைப்பு சாதிபேதமின்றிச் சமத்துவம் தழைக்க வியற்றப்பட்டது. ஸ்ரீ காந்தி ஆசிரமத்தார் இதை நிரம்ப ஊக்கத்தோடு அழகு செறியத் திறம்பட நடாத்திவைத்தனர். சமபந்திபோஜனத்தைப்பார்க்க நண்ணிய தனவைசிய அறிஞர் பலர் அங்கக்கண்ணுற்று அளவிலா மகிழ்சியுற்றுத்தாங்களும் அதிற்கலந்துகொண்டார்களென்பது குறிப்பிடத்தக்கதென்று ஸ்ரீமான் கு. கும்பலிங்கம் பிள்ளை அறிவிக்கிறார்.

---

[7ம் பக்கத் தொடர்ச்சி]

ஷமாக அவர்கள் தாழ்வாரத்திலேயே அல்லது ஜன்னல்களுக்கு வெளிப்புறங்களிலிருந்தபடியேதான் நிறுத்திவைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றார்கள். அதுபோலவே பெரும்பாலும் இதர கச்சேரிகளிலும் நடத்தப்படுகின்றார்கள். நியாயாதிபதிகளும் உத்தியோகஸ்தர்களும் ஆதிதிராவிடர்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் முகம்மதியர்களாகவும், ஜஸ்டிஸ் கொள்கைகளை ஆதரிக்கும் பார்ப்பனரல்லாத இந்துக்களாகவுமிருந்தால் இவ்விதம் நடக்குமா என்பதை கவனியுங்கள். சென்ற சட்டசபை தேர்தல்களில் கிராம கர்ணம் முதல் கொண்டு பெரிய உத்தியோகஸ்தர்கள் வரையில் பார்ப்பனர்கள் எத்தனை பேர் சுயராஜ்யகட்சிக்கு சாதகமாக வேலை செய்ததாக சொல்லப்படுகின்றது. ஆதியில் ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்தவுடன் ஒரு பெரிய ஜமீன்தார் இதற்கு வேண்டிய ஆதரவளித்துக்கொண்டிருந்தார். அது தெரிந்து அந்த தாலூக்காவிலிருந்த பார்ப்பன உத்தியோகஸ்தர்கள் அவருக்கு செய்த தொந்திரவினால் அவர் அவ்வளவு வெளிப்படையாகஇல்லாமல் சற்று ஒதுங்கி இருக்கும்படி நேரிட்டது. ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்ததற்காக மறைப்பொருளாக தாங்கள் இம்சிக்கப்படுவதாக பலர் என்னிடம் சொல்லியிருக்கின்றார்கள். உத்தியோகங்களுக்கு இவ்வளவுமகிமை இருப்பதால் தான் நமது பார்ப்பன சகோதரர்கள் மேலும் மேலும் கைப்பற்றிக்கொண்டுவருகிறார்கள். நாம்மட்டும் வேதாந்தம் பேசிக்கொண்டிருப்போமானால் நாளுக்கு நாள் நாம்கீழேபோய்க்கொண்டிருக்கவேண்டியதுதான்.

ஆர். சி. வெங்கட்டராம நாயுடு,
கும்பகோணம்.

[6ம் பக்கத் தொடர்ச்சி]

வகுப்புவாரி திட்டத்தின் மூலமாய் பதவி அடைந்துவிட்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தப்பு என்கிறார் "இது உண்ட கலத்தில் இரண்டுக்கு இருந்தது" போல் அல்லவா இருக்கிறது. இது மாத்திரமல்ல; கள், சாராயம குடிப்பது கெடுதியா, என்றுகூட இனிமேல்தான் படித்துதெரிந்து கொள்ள வேண்டுமாம். இதைப் பள்ளிக்கூடத்திலேயேபடித்துவிட்டுவாராமல் ஏழை வரிசெலுத்துவோர் பணத்திலாமாதம்5500வாங்கிக்கொண்டு மந்திரியாகித்தானா படிக்கவேண்டும்? கள்குடியின்றால்சர்க்கார்நடக்காதாம். சர்க்காரை நடத்திக்கொடுக்கத்தான் இவர்களை சுயராஜ்பக் கட்சியார் மந்திரிகளாக்கினார்கள் என்பது இப்போதாவது விளங்கவில்லையா? இன்னமும் இவர்கள் ஊருக்கு ஊர் முன்னுக்குப் பின் புரண்டு பேசுவதைப்பற்றி வண்டிவண்டியாய் எடுத்துச்சொல்லலாம். இந்த மந்திரிகள் தங்கள் கட்சிக்கு 15 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொல்லுவது சுத்தப் பொய் என்றே சொல்லுவேன். சுயராஜ் கட்சி மெம்பர் 40 பேரும சட்ட மெம்பர் தயவால் நியமனம் பெற்றவர்களும் ஒத்துழையாப் பார்ப்பனர் தயவால சட்டசபைக்கு வந்தவர்களும் பின்பலமாயிருக்கிறார்கள். இதை வெளிபாக்கக்கூட ஜஸ்டிஸ் கட்சிக்கு யோக்கியதை இல்லை என்பதானால் இதைவிட நமது சமூகத்திற்கு வேறு அவமானம் வேண்டியதில்லை. ஆகலால் இந்த புரட்டுகளையும் சூழ்ச்சிகளையும் வெளிப்படுத்த எங்கெங்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றதோ அதை உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறேன். இதற்காகத்தான் நீங்கள் சட்ட சபையில் இருந்தால் இருக்கலாம். ஒரு சமயம் சர்க்கார் நிஷ்டூரமோ மந்திரிகளின் சொந்த சிநேகத்திற்கு கெடுதியோ வரும் என்பதாகப் பயப்படுவதாயிருந்தால் கவுன்சில் பதவியை ராஜீனாமா கொடுத்துவிட்டு வெளியில் வந்துவிடுவது சுயமரியாதைக்கு அழகல்லாமல் சுயராஜ்யக் கட்சியாரின் சுயநலத் திட்டத்தை நடத்திக்கொடுக்கும் மந்திரிகளுடன் சரி சமமாய் உட்கார்ந்திருப்பது மிகவும் கேவலமானதாகும். மதுரை மகாநாட்டில் தலைவர் பனகால் அரசர் சட்ட சபையில் மந்திரிகளையும் சர்க்காரையும் எதிர்க்க சந்தர்ப்பம் கிடைக்கிற காலத்தில் கொஞ்சமும தயவு தாக்ஷண்யமில்லாமல் எதிர்ப்போம என்றும் உத்தியோகம ஏற்பதில்லை என்றும் சொன்னார். இதைப் பார்ப்பனர்கள் வாக்குத்தத்தம் போலும், பார்ப்பனக் காங்கிரஸ் வாக்குத்தத்தம் போலும் செய்துவிடாமல் பார்ப்பனரல்லாதார் வாக்குத்தத்தமபோல் செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிறகு ஸ்ரீமான்கள் B. முனிசாமி நாயுடு திவானபகதூர் M. கிருஷ்ணன் நாயர், குமாரசாமி ரெட்டியார், பனகால அரசர், P. T. ராஜன், A. ராமசாமி முதலியார் முதலியவர்கள் நாயக்கர் பேசியதை அனுசரித்துப் பேசி மந்திரிகளையும் சர்க்காரையும் எதிர்ப்பதென்பதை உறுதிப்படுத்தினார்கள். அவர்களுடைய சொற்பொழிவுகளின் சாராம்சம் பின்வருமாறு:

### ராவ்பகதூர் பி. முனிசாமிநாயுடு

அடுத்தாப்போல் திரு. பி. முனுசாமி நாயுடு பேசுகையில், தங்கள் கட்சியார் இன்று கூடிய கூட்டம் ஒன்றில் இந்த சட்டசபை காலத்தில் உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுவதில்லை என்றும் நாட்டின் பெருங்குடி மக்களைப்பாதிக்கக் கூடிய திட்டங்களையெல்லாம் எதிர்ப்பதென்று தீர்மானித்திருப்பதாகவும், நாளையதினம் கலால் கிராண்டு வருவதால் யார் உண்மையாக எதிர்ப்பவர்களென்று பொது ஜனங்கள் தெரிந்துகொள்ளலாமென்றும், சுயராஜ்யக் கட்சியார் சம்பந்தப்பட்டமட்டில் மந்திரிகளை எதிர்ப்பதென்று முடிவு செய்யவில்லை என்றும், ஆகவே உண்மையாக மந்திரிகளை எதிர்ப்பவர்கள் ஜஸ்டிஸ் கட்சியினர் தானென்றும் கூறினார்.

### திவான் பகதூர்
### எம். கிருஷ்ணன் நாயர்

திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் பெருங் கரகோஷத்தினிடையே எழுந்து பேசுகையில், தமது நண்பர் திரு. முனுசாமி நாயுடு சொல்லியவையனைத்தையும் ஆதரிப்பதாகவும், இந்த வரவு செலவு திட்ட வாதத்தில்யார் உண்மையான எதிர்கட்சியார் என்பது தெரிந்துவிடுமென்றும், இரட்டை ஆட்சியை ஒழிப்பதாகச்சொன்ன சுயராஜ்பக் கட்சியார் இப்போது மந்திரிகளை ஆதரித்து வருவது வெட்கக்கேடான காரியமென்றும், சட்டசபையில் பெரும்பான்மையான கட்சியைச்சேர்ந்தவர்கள் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ளவேண்டியதிருக்க 15-பேர்கள டங்கிய சுயேச்சை கட்சியினர் அதிகாரத்திலிருந்து வருவது சரியல்லவென்றும், இவர்களுக்குக்கொள்கையாவது திட்டமாவது கிடையாதென்றும், நமது கட்சியினர் உத்தியோகத்திலிருந்த போது மந்திரிகளின் சுற்றுப் பிரயாணம் சம்மந்தமாக கேள்வி ரூபமாக சாமாரியாகக் கேட்டுக்கொண்டிருந்த சுயராஜ்பக் கட்சியினர் இப்பொதுள்ள மந்திரிகள் பந்தாம் போட்டுக்கொண்டுசுற்றுப் பிரயாணம்செய்வதைப்பற்றி ஒருகேள்வியும் கேட்காமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறார்களென்றும், ஜஸ்டிஸ் கட்சியார் 6 வருட காலமாகச் சுற்றுப்பிரயாணம் செய்ததைவிட அதிகமாகவே இந்த 3 மாதகாலத்தில் சுயேச்சைக் கட்சியார் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கின்றனரென்றும், மதுரை மகாநாட்டில் ஏற்பட்ட உற்சாகம் பழைய காங்கிரசில் கூட ஏற்பட்டதில்லையென்றும், பனகால் அரசர் திருநெல்வேலியிலும் மற்ற இடங்களிலும் வரவேற்கப்பட்டதைப்போல் இதற்கு முன்பு வரவேற்கப்படவில்லையென்றும், இந்த வரவு செலவு திட்டத்தில் ஜனங்களுக்கு நன்மை பயக்கக்கூடியதை ஆதரித்து மற்றவைகளை எதிர்க்கவேண்டுமென்றும் கூறி முடித்தார்.

### திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார்.

பிறகு திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்டு திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் பேசுகையில் இப்போதுள்ள மந்திரிகள் சுயராஜ்யக் கட்சியாரின் தாளத்துக்குத் தகுந்தாப்போல் ஆடக்கூடியவர்களாக இருக்கிறார்களென்றும், ஒன்றே கால் டஜன் பேர்களாகிய சுயேச்சைக்கட்சியார் கொள்கையிலும், அபிப்பிராயத்திலும் செய்கையிலும் தங்களுக்குத் தாங்களே சுயேச்சையாக நடக்கிறார்களென்றும், முதல் மந்திரி சொன்னதை இரண்டாவது மந்திரி மறுக்கின்றார் என்றும், மூன்றாவது மந்திரியோ முதல் இருவர் சொன்னதையும்மறுக்கிறாரென்றும், இத்தகைய மந்திரி கட்சியினர் ஆட்சி புரிவதை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கப்போகிறீர்களாவென்றும், மந்திரிகளை எதிர்ப்பதா இல்லையா என்ற விடயத்தை ஆலோசனை செய்ய பீச்சில் போடப்பட்ட கூட்டத்தில் சட்டசபை அங்கத்தினர் ஒருவர் கூட வரவில்லை என்றும், ஆகவே யாரோ 3 பேர் கூடிக்கொண்டு ஏதோ பேசினார்களே யொழிய யாதொரு முடிவுக்கும் வரவில்லை யென்றும், நாம் அவ்விதமிராமல் மந்திரிக் கட்சியை எதிர்த்து இந்த வரவு செலவு திட்டத்தில் போராட வேண்டுமென்றும் கூறி முடித்தார்.

### பனகால் அரசர்

பனகால் அரசர் பெருங் கரகோஷத்தினிடையே பேசுகையில், திரு. நாயக்கர் முதலியவர்களின் சொற்பெருக்கைக் கேட்க இங்கு வந்து கூடியுள்ள மக்களைப்பார்த்து மகிழ்ச்சியடைவதாகவும், இப்போதுள்ள மந்திரிகள் சுயராஜ்யக் கட்சியினர் என்ன சொல்லுகின்றார்களோ அதன்படி நடப்பவர்களாக இருக்கிறார்களென்றும், முன்பு எதிர்த்த சுயராஜ்பக் கட்சியினர் இப்போது மந்திரிகளுடன் கைகுலுக்கி மகிழ்கின்றார்களென்றும், ஒருவர் இந்த மந்திரி சபை போனால் பழைய ஜஸ்டிஸ் மந்திரிசபை வந்துவிட்டால் என் செய்வது என்று ஓரிடத்தில் பேசியிருக்கிறார் என்றும், நாங்கள் மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொள்வதில்லையென்று தீர்மானித்திருப்பதால் அதைப்பற்றி அவர் பயப்படவேண்டியதில்லையென்றும், தம் கட்சியார் உண்மையான எதிர் கட்சியாகஇருந்து போராடப் போவதாகவும் கூறி முடித்தார்.

பிறகு கூட்டத்திலிருந்தவர்கள் சர் ஏ.பி. பாத்ரோ பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு சர் பாத்ரோ, தலைவர் பேசிய பிறகு லெபடி னெண்ட் பேசுவது அழகல்லவென்றும். தலைவர்கள் கூறியவையனைத்தையும் தாம் ஆதரிப்பதாகவும் கூறி உட்கார்ந்தார்.

### ஸ்ரீமான் பி டி இராஜன்

முடிவுரையாகப் பேசியதாவது:—

இதற்கு முன்னர் உபந்நியசித்தவர்களும் முக்கியமாக ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. ராமநாயக்கரவர்களும் நான் இங்குச்செய்யவேண்டிய வேலையை சுலபமாக்கி விட்டார்கள். ஸ்ரீமான் நாயக்கரவர்கள் கூறியதுபோல் இப்போது சுயராஜ்பக்கட்சிக்கூட்டம் பேச்சு மூச்சின்றி அடங்கிப் போயிருக்கிறது. சட்ட சபையில் கடந்த மூன்று வருஷகாலம ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளுக்கு எதிரிடையாக பெரிய கூச்சல்களும் உக்கிரமான உபயோகமற்ற எதிர்வாதங்களும் இருந்து கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது நாம் பார்ப்பதென்ன? பரிபூரண நிஸப்தம் தான். சென்ற சட்டசபையில் அவர்களுடைய இவ்வித நடத்தைக்கும் இப்

போதைய சபையில் மூச்சு பேச்சுக்காட்டாமல் கிடப்பதற்கும் உள்ளகாரணத்தை நீங்களேயோசித்துக்கொள்ளுமாறு விட்டுவிடுகிறேன். தாங்கள் அடங்கிக்கிடக்கும்தன்மை தங்களது மனச்சாட்சியையே உறுத்துகிறபடியால் ஓட்டர்களை ஏமாற்றப்போலிச்சமாதானங்களை கூற அவர்கள் விரும்புகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிகளாக வரச்சாத்தியப்படாமற் செய்வதற்காகவே தற்கால மந்திரிகள் அரசியல் விஷயத்தில் குழந்தைகளாயிருப்பினும் ஆதரிக்க வேண்டியிருப்பதாக உண்மையான காரணஞ் சொல்லமாட்டாமல் ஜஸ்டிஸ் கட்சியார் பேரில் பழியைப் போடுகிறார்கள். இந்த மாதிரி தடுமாற்ற சமாச்சாரம் இவர்களுக்குப் புதிதானதல்ல. மதுரை மஹாநாட்டில் நம தலைவர்பனகால் அரசர் சட்டசபையில் நமக்குப்போதுமான பெரும்பான்மையின்மையால் மந்திரி சபை ஏற்க பொறுப்புத்தாம் ஏற்றுக்கொள்ளவில்லையென்று வெளிப்படையாகக் கூறியுள்ளார். இப்போதைய மந்திரி சபை வீழ்ச்சியுறினும் நாம் மந்திரிசபையமைக்க அதே காரணமிருக்கின்றபடியால் மறு தேர்தலில் நம்கட்சியில் பெரும்பான்மை பெறாவிடில் அம்முயற்சியில் ஈடுபடமாட்டோமென்று உறுதியாகக் கூறக்கூடும் நம் கட்சி அவ்வளவு சுயமரியாதையற்ற கட்சியல்ல. இந்த ஆறு வருஷங்களாக இரட்டை ஆட்சியின் கட்டுத்திட்டங்களுக்குட்பட்டு நாம் கண்ணியமாய் வேலை செய்தோம். இந்த சீர்திருத்தக்கொள்கையை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் என்ற முறையில் ஒழுங்கான வழியில யார்வேண்டுமானாலும் சீர்திருத்த அரசியலை ஏற்றுக்கொண்டு நடத்தச்சம்மதிப்பதாகச்சொன்னோம். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக தற்போதையமந்திரிகள் சொற்பகால அளவிலேயே நாணயக்குறைவை காட்டிவிட்டார்கள். சுயராஜ்யகட்சியாருக்குநல்ல பிள்ளைகளாவதற்கு நம்மையே தூஷிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆதலால் அவர்களுக்குப்புத்திகற்பிக்கவேண்டியகாலம் நெருங்கிவிட்டது. நாம் சமீபகாலம் வரை மந்திரிமாரிடம் நேசபாவம் காட்டி வந்தோம்; நீங்கள் வரவு செலவு திட்ட விவாதகாலத்தில் நமது அங்கத்தினர்களுடைய பேச்சுகளைப் படிப்பீர்களானால் மந்திரிமாருக்கு நட்பு முறையில் சில யோக்கியமான அபிப்பிராயங்களைத் தவிர எதிரிடையாக ஒரு விஷயமும் சொல்லப்படாமையைக் காண்பீர்கள். இப்போது மந்திரிமார்கள் நடந்து கொள்ளும் நிலைமையை உத்தேசித்து நாம் அவர்களைச் சரியான வழியில் திருப்புவதற்காக எதிர்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். சொந்தக்கொள்கையும் வேலைத்திட்டமும் உள்ள மந்திரி சபையை விரும்புகிறோமேயொழிய சுயராஜ்யக்கட்சியாரின் சுயநலக் கட்டளையை எதிர்நோக்கிவாழும் மந்திரிமார்களை விரும்பவில்லை.

### திரு. ஏ. இராமசாமி முதலியார்

பிறகு திரு. ஏ. இராமசாமி முதலியார் கடைசியில் பேசுகையில், தாம் இதுவரையிலும் கார்பரேஷன் கூட்டத்தில் இருக்க வேண்டியிருந்ததால் நேரங்கழித்துவரநேர்ந்ததென்றும், சுயராஜ்யக் கட்சி அரசியல கட்சியல்லவென்றும் சென்ற சட்ட சபைகளில் திரு. கேசவபிள்ளை விஷயம் மேட்டூர் பிராஜெக்ட் அடிஷனல் ஹைகோர்ட் ஜட்ஜ் முதலிய விஷயங்கள் ஆலோசனைக்கு வந்தபோது சுயராஜ்யகட்சியினர் நடந்து கொண்ட பான்மையிலிருந்து அது பார்ப்பனக் கட்சியென்று ருசுவாகிவிட்டதென்றும் அக்கட்சியாரே தற்போதுள்ள மந்திரிகளை ஆட்டிவருகிறார்கள் என்றும், ஆகவே அத்தகைய மந்திரிகளை எதிர்க்க வேண்டியது நமது கடமை என்றும் கூறி முடித்தார்.

கடைசியில் வாழ்த்து கூறப்பட்டு கூட்டம் இரவு 8-45 மணிக்கு கலைவுற்றது.

## ஈரோடு சேர்மனுக்கு விருதுபட்டியில் "ஒரு தம்பி."

விருதுபட்டி முனிசிபல் நிர்வாகத்தைப் பற்றி "ஜஸ்டிஸ்" பத்திரிகையிலும் "திராவிடன்" பத்திரிகையிலும்ஒருவியாசமும் குறிப்புமகாணப்படுகிறது. அது வாஸ்தவமாயிருந்தால் ஈரோடு சேர்மனுக்கு விருதுபட்டியில் "ஒரு "தம்பி" இருப்பதாகத்தான் கருத வேண்டும். தற்கால ஸ்தல ஸ்தாபன இலாகா மந்திரிக்கு சம்சார சகிதமாய் தினம் ஒரு ஊருக்குப்போய் விருந்து சாப்பிடவும் நித்தியகண்டம் பூரணாயுளில்உள்ள மந்திரி பதவியை பலப்படுத்திக்கொள்ள அவ்வளவுமாயிருக்கிறதே அல்லாமல் வேறு கவலை இருப்பதாய்த் தெரியவில்லை. ஈரோடு சேர்மனுல் முனிசிபல் பணங்களை எந்தெந்த விஷயத்தில் கையாடப்பட்டது என்றும் எந்தெந்த ரிகார்டுகள் திருத்தப்பட்டது என்றும்சர்க்கார் கணக்குபரி சோதகர்கள்கண்டுபிடித்து சர்க்காருக்குத் தெரியப்படுத்தியதும் கவுன்சிலர்கள் அதாவது 20 பேர்களில் மெஜாரிட்டியாகிய 12 கவுன்சிலர்கள் நம்பிக்கையில்லா தீர்மானம் அனுப்பியதை சேர்மென் அவர்கள் நிராகரித்துவிட்டதும் இதன்பேரில் போலீஸ் அதிகாரிகளிடம் பிராது சொன்னதில், அவர்கள் கவர்ன்மெண்டு சாங்ஷன் இல்லாமல் எடுத்துக்கொள்ளப்படாது என்று சொல்லி தள்ளிவிட்டதும், சர்க்கார் சாங்ஷன் கேட்டதற்கு கலெக்டருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியப்படுத்தியதும், கலெக்டர் உண்மைகளைக் கண்டுபிடித்தும் தனக்கு அதிகாரமில்லையென்று சொல்லி மந்திரிகளிடம்போகச் சொல்லிபரிகாசஞ்செய்ததும் மறுபடியும்12 பேர்கவுன்சிலர்கள்சேர்ந்துசேர்மெனபிராசிகூஷன் செய்ய சர்க்கார் சாங்ஷன் கொடுக்க வேண்டுமென்று கோரி கவுன்சில் மூலமாய் ஒரு தீர்மானம் கொண்டுவந்ததையும் சேர்மென் நிராகரித்ததும், பிறகுவேறு மார்க்கமில்லாமல ஷை கவுன்சிலர்கள் மெஜாரிட்டியாராகிய 12 கவுன்சிலர்கள் ராஜிநாமா கொடுத்ததும் பத்திரிகைகளில் எல்லோரும் பார்த்திருக்கலாம். இனியும் எவ்வளவோ திருட்டும் புரட்டும அதற்குப்பின் நடந்துவந்ததும் தற்கால மந்திரிகளுக்கு நன்றாய்த் தெரியும். இப்பேர்ப்பட்ட திருட்டு புரட்டு ரிகார்டு திருத்துதல் முதலியதுகளை மனப்பூர்வமாய் மந்திரிகளும அதிகாரிகளும சிபார்சின்பேரில் ஆதரிக்கத் தொடங்கியபின்பு மற்ற சில இடங்களில் உள்ள சேர்மென்களுக்கும் நாக்கில் தண்ணீர் ஊறத் தலைப்பட்டு ஈரோடு சேர்மனைப் பின்பற்ற ஆரம்பிக்கச் செய்துவிட்டது நமக்கு ஒரு ஆச்சரியமாய்த் தோன்றவில்லை. அதாவது விருதுநகர் முனிசிபாலிட்டியில் சேர்மெனும் வைஸ் சேர்மெனும் சேர்ந்து முனிசிபல் இடத்தில் புகையிலை வெள்ளாமை செய்த காரியத்தை மறைத்ததாயும் அதிகாரிகள் விசாரணையில்பயிரிடப்பட்டது ருஜுவாயிருப்பதாகவும் டோல்கேட்டு குத்தகைக்கு விட்ட விஷயமாய் வருஷம் 1-க்கு 41000 ரூ. குத்தகைக்கு விடப்பட்ட டோல்கேட் இவ்வருஷம் 11050 ரூபாய்வீதம் 3 வருஷத்திற்கு விட்டதாகவும் அதுகளில் ஏதோ ஏசுகுபிசகோ தப்பு பதிவோ இருப்பதாகவும் மற்றும் ஒரு முகமதிய பள்ளிக்கூடம் புதிதாய்க்கட்டுவதற்காக 18-2-27ல் தான் எஸ்டிமேட் கவுன்சில் சபைக்கு வந்ததாகவும் அதற்கு 4-2-27லேயே கண்டிராக்டருக்கு வேலை நடத்தினதற்குசேர்மெனால்பணம் கொடுத்திருக்கிறதென்றும இன்னும் பலவிதமாய்காணத்தில் சந்தேகப்படத்தகுந்த மாதிரியாய் சொல்லப்படுகிறது. இவைகளைப்பார்த்தால் இது உண்மையாயிருக்குமபக்ஷம மந்திரிகளுக்கும ஸ்தலஸ்தாபன இலாகாவுக்கும்அது சம்பந்தமாய் பொறுப்புள்ள அதிகாரிகளுக்கும் இதைவிட கேவலமான காரியம் வேறில்லையென்றே சொல்லுவோம். இனியும் எத்தனை காலத்திற்கு இவ்வகைகளை இம்மாதிரிவிட்டுக்கொண்டு விருந்து சாப்பிட்டுக்கொண்டுதிரிவார்களோ தெரியவில்லை.

---

தருமபுரி:—நாகை, சேலத்தலைவர் மகாஜனசங்கத்தலைவரும், பிராமணரல்லாதவாலிபர்சங்கத்தின் தலைவரும ஆகிய திருவாளர் கே. சி. சுப்பிரமணியம் செட்டியாரவர்கள் (Bar-at-law) 12, 13-3-27 தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இவ்விடம் நடந்த சேலத்தலைவர் மகாஜன சங்கத்தின் நிருவாகக்கமிட்டிக்கூட்டத்திற்கு தருமபுரிக்கு விஜயம் செய்திருந்தார்கள். அது சமயம் இவ்வூர், இளைஞர் கிளப்பில் ஒரு பிரசங்கமும், பள்ளியில் ஒரு பிரசங்கமும் பிராமணரல்லாதார்வாலிப சங்கத்தில் ஒருபிரசங்கமும்செய்தார்கள். பிராமணரல்லாதார் சங்கத்தின பிரசங்கம் எல்லாருடைய மனதையும் கவர்ந்தது. இவ்வூரில் பிராமணரல்லாதார் சுயமரியாதை வெகுஉணர்ச்சியுடன் நிற்கிறது என்று தருமபுரி பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கக் காரியதரிசி அறிவிக்கிறார்.


## இனாம்

இலக்ஷம் 100000 ரூபாய்கள்

இதனை 20000 பேர்கட்கு மாத்திரம் இலவசமாய் விநியோகிக்கத் தீர்மானம் செய்திருக்கின்றபடியால் இம்மாத முடிவிற்குள் ஓரணா தபால் முத்திரையுடன் மனு செய்துகொள்ளக் கோருகின்றனன்.

Md. S. A. அப்துல்காதிர் சாயபு,
நெ. 2 அணிகலாச்சிரமம்,
செவ்வாய்ப்பேட்டை சேலம்.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கப்படாது, கொடுத்தால் நீ நரகத்திற்கு போவதல்லாமல் கொடுத்தவனுடைய குடும்பமும் கெட்டுப்போகுமென்று அந்த ஏட்டிலேயே எழுதப்பட்டிருக்கிறது. பிராமணனுக்கு தானம் கொடுத்தால் உங்களுக்கு புண்ணியமும் குடும்பத்திற்கு க்ஷேமமும் உண்டாகுமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. உங்கள் புரோகிதர்களும் உங்களுக்குச் சொல்லுகிறார்கள். நீங்களும் செய்துவருகிறீர்கள். அந்த சாஸ்திரமே இன்னவனுக்குத்தான் தானம் செய்யவேண்டும் பாத்திரமல்லாதவனுக்குச் செய்தால் நீயும் கெட்டு உன் குடும்பமும் நாசமடையுமென்று சொல்லியிருக்கிறது. நீங்கள் செய்யும் தானமெல்லாம் பாத்திரம்-பாத்திரமல்லாத எந்த பிராமணனுக்குப் போய்ச் சேருகின்றது. இவன் தக்கவன், இவன் தகாதவன் என்று உணராத குற்றத்தால் வாங்கினவனையும் கெடுத்து கொடுத்தவனும் நரகத்திற்குப் போகிறான் என்று பராசர ஸ்மிருதி சொல்லுகிறது. ஆனதால் தானம் செய்கையில் உத்தம பாத்திரங்களைக் கொடுப்பவனே தெரிந்து கொள்ளவேண்டும். உத்தமமான பிராமணன் இல்லையே என்று வருத்தப்படவேண்டியதில்லை. தன் சுற்றத்தார் தன் குடும்பத்துப் பெண்கள் இவர்கட்குக் கொடுப்பது உத்தமமான பிராமணனுக்குக் கொடுப்பதிலும் கோடிப்பங்கு புண்ணியமென்று ஸ்மிருதி விதித்திருக்கிறது. மகா பாரதம் சாந்தி பருவம் 35வது அத்தியாயத்தில் வியாசர் தருமருக்கு தானம் வாங்க யோக்கியதை இல்லாதவனைப்பற்றி சொல்லியிருப்பதைப்பற்றி சொல்லியிருப்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன். "பெருமைக்காகவும் கொடாவிட்டால் என்ன செய்வாரோ வென்ற பயத்தாலும் கெட்ட குணமுள்ள பிராமணன் ஏழையாயிருந்தாலும் நமக்கிஷ்டத்தை செய்கிறான் என்று எண்ணியோ, தர்மமென்றெண்ணியோ தானம் செய்யக்கூடாது. பாடகன், உபாத்தியார், திருடன், பிறரை நிந்திப்பவன், திருப்தியில்லாதவன், யாசகமே தொழிலாய்த் திரிகிறவன், ஒருதரம் தானம் வாங்கினவன், வைதீக ஸம்ஸ்காரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், தவமில்லாதவன் (அதாவது அஹிம்சை, சத்தியவசனம், கொடுமையில்லாமை, அடக்கம், தயை, இத்தகைய குணங்களுக்கே தவமென்று பெயர்.) வேதாத்தியானம் இல்லாதவன் குருக்கள், புரோகிதன், அவன் பந்து ஏவல்செய்வோன் இவர்களுக்குத் தானம் கொடுக்கப்படாது கருங்காலி கட்டையாவது கல்லையாவது கட்டிக்கொண்டு கடலைக்கடக்க நினைத்தவன் எப்படி மூழ்கி விடுவானோ அப்படி வாங்கினவனும் கொடுத்தவனும் நரகத்தையடைவார்கள். மரத்தால் செய்த யானை, தோலால் செய்த மிருகம் தேவ ஒழுக்கமில்லாத பிராமணன் இம்மூன்றும் முறையே யானை மிருகம் பிராமணன் என்ற பெயரைத்தவிர வேறு அவைகளில் பயனையடைய மாட்டா. ஸ்திரிகளிடத்தில் நபுமஸகனும் பசுவினிடத்தில் பசுவும் பயனற்றன வாயிருப்பதுபோலவும் இறகிலாத பட்சியைப்போலவும் வேதம் தவம் ஒழுக்கமிலாத பிராமணன் பயனற்றவனாகிறான். மனிதர்களில்லாத கிராமமும் ஜலமற்ற கிணறும், அக்கினி இல்லாத இடத்தில் செய்த ஓமம் எவ்விதமோ அவ்விதமே பாத்திரமல்லாத பிராமணனுக்குச் செய்யும் தானமும் பயனற்றதாய் நம் குடும்பத்தை பாழ்பண்ணுவதாய் வந்து முடியும் மற்றவையெல்லாம் புத்தியுடையவர்கள் மனதில் படுவதேயாம்.

---

## உண்மை உரைக்கும் பார்ப்பனரும் உளர்

பூனைமேடு சர்வஜன ஹைஸ்கூல் மாணவர் சங்க வருஷோற்சவம் 5-3-27-ல் நடைபெற்றது. அப்பொழுது கோயமுத்தூர் விவசாயக்காலேஜ்பிரின்ஸ்பால் ஸ்ரீமான் ராமசாமி சிவன் (ஐயர்) அக்கிராசனராகவும் திருப்பூர் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் கிருஷ்ண மூர்த்தி ஐயர் உபந்நியாசகராகவும் இருந்து பிரசங்கம் புரிந்தார்கள். அப்பிரசங்கத்தில் பார்ப்பனர் தோன்றியதின் உண்மைவரலாறுகள் உரைக்கப்பட்டன. அவற்றின் குறிப்புகள் சில கீழே எழுதுவல். அவற்றை அன்பர் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

ஸ்ரீமான் இராமசாமி சிவன் சொல்லியதாவது:—

1. பழங்காலத்தில் எல்லோரும் ஒரே ஜாதியாராக இருந்தனர். சங்கராச்சாரியார் காலத்தில் இச்சாதி வேற்றுமைகள் உண்டாயின.

2. சுவாமி சிரத்தாநந்தர் ஆரிய சமாஜம் என்று பெயர் வைத்து எல்லாஜாதியர்க்கும் பூணூல் போட்டுப் பிராமணர் ஆக்குவதைப் போல் சங்கராச்சாரியார் பள்ளர் பறையர் முதலிய பல ஜாதிகளுக்குப் பூணூல் போட்டுப்பிராமணர் ஆக்கிவைத்தனர்.

3. இவ்வூரிலிருந்து ஒரு 200 சக்கிலியர்களை செங்கற்பட்டு ஜில்லாவிற்குக்கொண்டு போய் 3 மாதம் அவர்களுக்கு நல்ல உணவும் உடையும் கொடுத்துவைத்திருந்து அவர்களுக்குப்பூணூலும் திருமண்விபூதி வைத்து மறுபடியும் இங்கு கொண்டு வந்தால் அவர்கள் பிராமணர் ஆகிவிடுகின்றனர்.

4. பழங்காலத்தில் மந்திரங்களைச் சம்ஸ்கிருதத்தில் ஏதோ ஒருகாரணத்தினால் சொன்னார்கள். அம்மந்திரங்களைச் சொல்வதால் பார்ப்பனர் உயர்ந்த குலத்தினர் என்கின்றனர். அம்மந்திரங்களில் எந்த தந்திரமும் இல்லை. அதை எந்தப்பாஷையில் வேண்டுமானாலும் சொல்லலாம் (என்று சொல்லி வரும்பொழுது காயத்திரி மந்திரம் சொல்லி அதைத்தமிழில் சொன்னார்).

5. உண்மையை உரைப்பவன் எவனோ அவனே பிராமணன் என உபநிஷத்துக்களில் சொல்லப்பெற்றுள்ளது. அவ்வாறு உண்மை உரைத்துப்பிராமணன் ஆனவன் "ஜாத்காரு" என்பான்.

ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ஐயர் உரைத்ததாவது:—

1. சங்கராச்சாரியார் காலத்திற்கு முன்பு ஸனத்தர் காலத்தில் ஜாதிபேதங்கள் இல்லாமல் இருந்தன. சங்கராச்சாரியார் தான் நான்கு வகை வருணங்களையும் கற்பித்தார்.

2. ஓர் காலத்தில் சங்கராச்சாரியார் 1000 மீன் பிடிக்கும் செம்படவர்களைப் பிராமணராக்கி வைத்தார். இதற்குத்தகுந்த ஆதாரவுகள் இருக்கின்றன.

3. இக்காலத்தில் சௌராஷ்டிரர் விசுவகர்மர் முதலியோர் பிராமணர் ஆனதைப்போல் இந்தப்பிராமணரும் ஒரு காலத்தில் ஒரு ஜாதியிலிருந்து பிராமணர் ஆனவரே.

4. பழங்காலத்தில் ஒழுக்கத்தினால் பிராமணர் இருந்தனரே அல்லாமல் பிறப்பினால் பிராமணர் என்ற ஜாதியில்லை.

5. பறையர் குலத்தில் பிராமணர் உண்டு. பார்ப்பனர் குலத்தில் பறையர் உண்டு. நந்தனார் பறையர் குலத்தவரானாலும் உண்மையான பிராமணராவார். இப்படி எல்லாக் குலத்திலும் பிராமணர் உளர். பிறப்பினால் பிராமணர் என்ற ஜாதி எப்பொழுதும் இல்லை.

பார்ப்பனர் உண்டாயதன் உண்மை வரலாறுகள் இவைகளேயாகும். இவற்றைப் பெரும்பதவிகளில் இருக்கும் படித்தபார்ப்பனர் ஒப்புக்கொண்டது ஆச்சரியமே. உண்மையை ஒப்புக்கொள்ளாமலும் உரைக்காமலும் ஒன்னுமோ இவ்வுண்மைகளைச் செம்மையாக ஆராய்ந்து பார்ப்பனர் இனியாவது பிறப்பினால் ஜாதிஇல்லை என்ற பொய்க்கவுரவத்தை ஒழிப்பார்களாக. பார்ப்பனர் பிறப்பினால் உயர்ந்தவர் என்னும் போலி வேஷத்தைவிட்டு உண்மை யுணர்ந்து சமத்துவமாக நடப்பார்களாக. இவ்வுரைகளைப்பொதுவாகஎல்லாப்பார்ப்பன உபாத்தியாயர்களும் சிறப்பாக சர்வஜன ஹைஸ்கூல் உபாத்தியாயர்களும் தெரிந்துநடந்து கொள்வார்களாக நடந்தால் நலம் நலம் என்று பூனைவாசி அறிவிக்கிறார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஐயம்பேட்டைக் கிளை— 5-3-27 தேதி சனிக்கிழமை மாலை இக்கிளைச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று ஐயம்பேட்டை போர்டு தொடக்கப்பள்ளியில் பாபநாசம் சப்மாஜிஸ்ட்ரேட் திருவாளர் டி. டி. பொன்னையா பிள்ளையவர்கள் பி. ஏ. தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுகாலை வலங்கைமான் டிப்டி தாசில்தார் திருவாளர் டி. பி. நாராயணராவ் பி. ஏ. அவர்கள் "கம்பர் கவிநயம்" என்பது பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

அருப்புக்கோட்டை வேலாயுதபுரத்தில்:— ஸ்ரீசாலிமகரிஷிகோத்திரர் முன்னேற்றசங்கத்தின் ஆதரவில் ஷை சங்கக்கட்டடத்திற்கு முன்பாக மாசி மாதம் 11 தேதியில் திருவாளர் லக்ஷ்மண பிள்ளை பி. ஏ. அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. சுமார் 600 ஜனங்கள் வந்திருந்தனர். அக்கிராசனருக்கும் ஷையூர் அமெரிக்கன் மிஷன் ரெவரெண்டு கனம் ஒயிட் எம். ஏ. அவர்கட்கும் காரியதரிசியால் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன. கனம் ஒயிட் அவர்கள் "கல்வி" என்னும் பொருள் பற்றித்தமிழில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அக்கிராசனர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது என சங்க பிரசிடெண்டு அறிவிக்கிறார்.

## சென்னை.

யோகானந்தர்ச்சிரமம் சித்தவைத்திய சங்கத்தின் ஆதரவில் நடைபெறுகின்ற வைத்தியசாலைகளில் பிப்ரவரி மீ முதலில் இருந்து முடியுமளவும் மருந்துண்டவர் கணக்கு. 1-வது இராயப்புரம் 2-வது உப்பரவர்பாளையம்.

| | |
|---|---|
| ஆண் 417 | ஆண் 587 |
| பெண் 517 | பெண் 354 |
| சிறுவர் 134 | சிறுவர் 67 |
| ஆக. 1068 | ஆக 908 |

இவ்விரண்டு வைத்தியசாலைகளும் ஏழை மக்களுக்கு மிகவும் உபகாரமாக இருக்கிறதென்று பலரும் கருதுகின்றார்கள் என்று அமைச்சர் எழுதுகின்றார்.

# தி ஏஷியாடிக் கவர்ன்மெண்டு செக்யூரிட்டி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி "லிமிடெட்."

தலைமை ஆபீஸ்: பெங்களூர் சிட்டி.

முன்னேற்றமடைந்த ஒரு சுதேச ராஜ்யத்தில் முன்னேறிவருகிற ஒரு சுதேச கம்பெனி

உங்களுடைய முதுமைப்பருவத்துக்கும் எதிர்பாராத நிர்யாண தசைக்கும் இக்கம்பெனியின் லைப் அஷ்யூரன்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து ரூ. 10,000 வரை பொருள் சேமிப்பு செய்யவும்; ப்ரப்பெர்டி இன்வெஸ்டுமெண்டு ஸ்கீமிலும் பெர்சனல் இன்வெஸ்டுமெண்டு டிபார்ட்டுமெண்டிலும் நீண்ட கால தவணைக்கு வட்டியுடனும், வட்டியில்லாமலும் முறையே கடன்களும் பெறலாம். விபரங்களுக்கு ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள ப்ராஸ்பெக்டஸ் தருவித்துப்பார்க்கவும்.

சட்டப்படி இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஜாமீனாக ரூ. இரண்டு லக்ஷமும் மைசூர் கவர்ன்மெண்டுக்கு ரூ. ஐம்பதினாயிரமும் டிபாசிட் செய்திருப்பதுடன் மைசூர் கவர்ன்மெண்டாரால் காரண்டி செய்யப்பட்ட நஞ்சனகூடு சாமராஜா நகர் ரெயில்வே டிபஞ்சர்கள் ரூ. ஐம்பதினாயிரத்துக்கு வாங்கப்பட்டிருப்பதுமல்லாமல் ஸ்தாவர சொத்துக்களின்பேரிலும் ரூ. ஒரு லக்ஷத்து இருபத்தையாயிரம்போல் அடைக்கப்பட்டுமிருக்கிறது.

## லைப் அஷ்யூரன்ஸ் டிபார்ட்மெண்டு.

1922-ஹு ஜூன்-மீ போலதான் இது ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை 15 லக்ஷ ரூபாயிக்கு லைப் அஷ்யூரன்ஸ் பத்திரங்கள் வெளியிட்டிருப்பதிலிருந்து இதன் வளர்ச்சியைக் காணலாகும். குறைந்த சந்தாக்களிலும் அவதியில்லா நிபந்தனைகளிலும் நமது தேசத்து ஜனங்கள் லைப் அஷ்யூரன்ஸ் எடுத்துக்கொள்ளுவதே முக்கியநோக்கமாக இக்கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது. 20 வயதுக்கு மேற்பட்ட திடசரீரமுள்ள எல்லா ஆண், மக்களுக்கும் ரூ 500 முதல் 10,000 வரை லைப் அஷ்யூரன்ஸ் பத்திரம் இக்கம்பெனி அளிக்கிறது. நாலுவித லைப் அஷ்யூரன்ஸ்களும் அதாவது ஆயுள் பரியந்தம் (Whole Life) கால நிர்ணயம் (Endowment) மும்மடங்கு ஆதாய பத்திரம் (Triple Benefit Policies) முதலியன இக்கம்பெனியில் உண்டு.

ப்ரப்பெர்ட்டி இன்வெஸ்டுமெண்டு ஸ்கீம்—இதன்படி லைப் அஷ்யூரன்ஸ் பாலிசி ஹோல்டர்கள் ஸ்தாவர சொத்துக்களை அடமானம் வைத்தால் அஷ்யூர் செய்திருக்கிற தொகை வரையில் கடன்பெறசௌகரியம் செய்யப்பட்டிருக்கிறது.

## பெர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபார்ட்டுமெண்டு.

சொற்பமாக மீத்து வைப்போருக்கு இதிலிருந்து வட்டியில்லாத கடன், ரூ. 500 முதல் ரூ. 1000 வரை கொடுக்கப்படுகிறது. இந்த பெர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு, பாண்டு ஒன்றின் விலை ரூ.58—8—0 (அதாவது பாண்டின் விலை ரூ 50—0—0 அட்மிஷன் ஸ்டாம்பு பீஸ் ரூ. 2—8—0, வருஷாந்திர பீஸ் ரூ. 6—0—0) இவைஒரே தடவையிலாவது தவணைகளிலாவது செலுத்தலாம். தவணையில் செலுத்துகிறவர்கள் அட்மிஷன் ஸ்டாம்பு பீஸ் ரூ. 2—8—0 கொடுத்துப்பாண்டின் தொகையை மாதம் 1-க்கு ரூ. 1—0—0 வீதம் 50 மாதங்களிலும் வருஷாந்திர பீஸ் ரூ. 6—0—0ம் வருஷம் 1-க்கு 1—8—0வீதம் 4 தவணைகளிலும் செலுத்தலாம். பூரா பாண்டின் தொகை செலுத்திவிட்ட மெம்பர்களையும் தவணையில் செலுத்திவருகிறவர்களில்ப்ரதி வருஷம் ஜூன்-மீ 30வ டிசம்பர் 31-வ களுக்குமுன் லேட்பீஸ் ரூ. 1—8—0 கொடுக்கிறவர்களின் நெம்பர்களையும் சேர்த்து வருஷத்தில் இரண்டு தடவை ஜனவரி-மீ 31-வயிலும் ஜூலை-மீ 31-வயிலும் கடன்பெற ட்ராயிங்குகள் நடைபெறும். முதல் 1000 மெம்பர்களுக்கு ஒரு மெம்பரும் பின்னிட்ட பிரதி 500 நெம்பர்களுக்கு ஒரு மெம்பருமாக கடன் நிர்ணயிக்கப்படும். 1000 ரூ. கடன் பெறுவோர்கள் மாதம் 1க்கு 10 ரூபாய்வீதமும்; 500 ரூ. கடன் பெறுவோர்கள் மாதம் 1-க்கு 5 ரூபாய் வீதமும் நூறு மாதங்களில் வட்டியில்லாமல் திருப்பி செலுத்தவேண்டியது. பாண்டின் தொகை ரூ. 50ம் பூரா செலுத்தின தேதியிலிருந்து ஐந்து வருஷங்களுக்குப் பின் எப்போது வேண்டுமானாலும் வாப்பீஸ் வாங்கிக்கொள்ளலாம் ரூல்ஸுக்கும் அட்மிஷன் பாரத்துக்கும் எழுதவும். கீழே கண்ட பேர்கள் 1923, 24, 25, 26-ம் ஹுங்களிலும் 1927-ஹு ஜனவரி-மீ 31வ நடந்த ட்ராயிங்குகளிலும் எடுக்கப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீமான் | மாரமசோஸிப்யாசேனு, தலவாகட்டி, ஸிலோன். | ரூ 1000 |
| 2 | ,, | ப்ரபோதசந்திர பைசாக், டேக்கா, வங்காளம். | ,, 1000 |
| 3 | ,, | கே. என் கப்பாணிய செட்டி, மேர்க்காரா குட்கு. | ,, 1000 |
| 4 | ,, | டி. டி. விக்கிரமசிங்கி, டிக்வெலா, ஸிலோன். | ,, 1000 |
| 5 | ,, | ஸி. வெங்கிட்டராமசாஸ்திரி அமலாபுரம் கோதாவரி | ,, 1000 |
| 6 | ,, | பாகிரலிம்மம், எங்ரேவர், காக்கிநாடா. | ,, 1000 |
| 7 | ,, | முடுமோகி பாபுனேனு பெரைரா, கொளும்பு. | ,, 1000 |
| 8 | ,, | ப்ரதான் இந்த்ராஜித் சந்ரா, பீகார். | ,, 800 |
| 9 | ,, | டி. வி. வெங்கிட்டராமய்யர், பித்ருகுண்டா. | ,, 1000 |
| 10 | ,, | காஜாவிஸ்வநாதன், வியாபாரம், மசூலிபட்டணம். | ,, 1000 |
| 11 | ,, | தோரைசாமி நாயுடு, வத்திகேல், ரங்கூன். | ,, 1000 |
| 12 | ,, | W. L. நரசிம்ம ராவ், க்யாஷியர், காக்கிநாடா. | ,, 1000 |
| 13 | ,, | பி. ராமச்சந்திர ராவ் 57 த. செட்டி வீதி மதராஸ். | ,, 1000 |
| 14 | ,, | பரசுராம் பலவந்த முட்புர்க்கார், இந்தூர் ஸிட்டி. | ,, 1000 |
| 15 | ,, | கே. ஸிவநாராயணமூர்த்தி அமுல்தலவல்சா கஞ்சம். | ,, 1000 |
| 16 | ,, | கே. மகாதேவ டிக்ஷிட், டீச்சர், பீஜப்பூர் | ,, 1000 |
| 17 | ,, | கே. ஸிட்டிராஜு, வியாபாரம், காக்கிநாடா. | ,, 1000 |
| 18 | ,, | ஸ்ரீகண்ட பே, அகில்யபூரா, இந்தூர் ஸிட்டி. | ,, 1000 |
| 19 | ,, | மேகராஜ் உமேத்மல்ஜி தப்பணகாரதெரு கோவை | ,, 1 00 |
| 20 | ,, | ராகவேந்திர ஸ்ரீனிவாச ஜவல்ஜீகர், ஷோலாப்பூர். | ,, 1000 |
| 21 | ,, | ஸி. சவுந்திரராஜ முதலியார் கரென்ஸி ஆபீஸ் மதராஸ் | 1 00 |
| 22 | ஸ்ரீமான் | ஆர். ஜி. ஹாலக்கேரி, புஸ்தக டிபோ, தார்வார். | ,, 1000 |
| 23 | ,, | ராஜ்ராம் நர்பாம்நாயக், சூரத் பரோடா ஜென்ஸி | ,, 1000 |
| 24 | ,, | பி. ஸ்ரீராமமூர்த்தி, பீதாபுரம், கோதாவரி. | ,, 1000 |
| 25 | ,, | N வெங்கிட்டராம்தாஸ் முகுண்டாபுரம் காக்கிநாடா | ,, 10 |
| 26 | ,, | ஆர். வேங்கிட்டய்யகாரு, இனும்தார், அமலாபுரம். | ,, 100 |
| 27 | ,, | ஜி. வெங்கிட்டப்பா, வியாபாரம், பெல்லாரி. | ,, 1000 |
| 28 | ,, | ராமச்சந்திர வாமனகாண்டிகார், பரோடா. | ,, 1000 |
| 29 | ,, | ஆர். என். நடேசன் உபாத்தியாயர் ஐதராபாத் Dn. | ,, 1000 |
| 30 | ,, | விடல்ஸிம்ஜி சேத்கலான், அலிபாக், பம்பாய். | ,, 1000 |
| 31 | ,, | ரங்கப்பா ஷன்போக், உலிகுண்டி, தும்கூர். | ,, 1000 |
| 32 | ,, | வி. வெங்கிட்ரம்ண ஹெட்ஜி, ஹோனவர், | ,, 1000 |
| 33 | ,, | மகம்மது யூசுப், டிஸ்டிலரிகார்டு, ஐதராபாத் (Dn.) | ,, 1000 |
| 34 | ,, | சைத்லாகூர் அலி, பி. வ. பி, டி, அவுரங்கபாத். | ,, 1000 |
| 35 | ,, | திவான் வாசுதேவ நம்பூத்ரிபாட், ஆழ்வாய். | ,, 700 |
| 36 | ,, | சங்கரப்ப தேவன் கொண்டா, ஹுப்ளி. | ,, 1000 |
| 37 | ,, | ஷேக்பாபுமியா ஷேக்மகமது, பவானிபேட், பூனா. | ,, 1000 |
| 38 | ,, | சைது அலி அஸ்கர்பில்க்ருமி, ஐதராபாத். (Dn.) | ,, 1000 |
| 39 | ,, | நாராயணவித்தல் லோங்கர், இந்தூர் ஸிட்டி. | ,, 1000 |
| 40 | ,, | ராமசந்திர அனந்தஷீராலி, பம்பாய். | ,, 800 |
| 41 | ,, | கே. ஜி. ப்ரகண்டோ, கொளும்பு. | ,, 1000 |
| 42 | ,, | எஸ். ஜி. சாஸ்ரி அன்னகலா, தார்வார். | ,, 1000 |

எல்லா விடங்களிலும் லைப் அஷ்யூரன்ஸும் பாண்டும் சேர்ந்துக்கொடுக்க ஏஜண்டுகள் தேவை.

இதுவும் ஒரு ஜனசேவையானதால் கண்ணியமும் செல்வாக்குமுள்ளவர்கள் விபரங்களுக்கு எழுத கோரப்படுகிறார்கள்.

E. A. கனகசபாபதி முதலியார், கோட்டை, ஈரோடு. தமிழ் ஜில்லாக்களின் டிவிஷனல் ஏஜண்டு.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தானே என்றால், "ஐயையோ! அப்படியே தாவது எங்களை யெல்லாம் இழுத்து விடாதீர்கள். எங்கள் பிழைப்பே போய்விடும், எங்களுக்கு சுயமரியாதை அதிகம் உண்டு. இந்த இயக்கத்தில் எங்களுக்கு அதிகம் பற்றுண்டு; பட்ட நாமங்களை எங்கள் நேமங்களை வெளிப்படுத்திக்கொள்வதில்லை அதற்காக எக்ஸ்யூஸ்மி சார், உங்களுக்கு வேண்டிய உதவி மணி விஷயத்தில் இருக்கிறோம். ஏனெனில், இப்போதிருக்கிற ஜட்ஜி நான்பிராமின் இப்போ பயமில்லை; இவருக்குப்பின் பிராமின் ஜட்ஜி, முன்சிபுகள் வந்தால் பிராமின் வக்கீல்கள் முதலில் எங்களை இவர்கள் நான்பிராமின் பார்ட்டி என்று சொல்லிவிடுவார்கள்; அப்புறம் எங்கள் வாயில் மண் விழுந்துவிடும். பிளீஸ் எக்ஸ்கியூஸ்மி" என்று சொல்லுகிறார்கள்.

இப்படி இவர்கள் சொல்லுவதிலும் சில தாவது உண்மையிருக்கலாம். ஆகையால் பிராமணரல்லாதார்கள் தங்களுடைய பிறப்புரிமையை அடைவதற்கு எத்தனை விதமான இடுக்கண்கள் பிராமண உத்தியோகஸ்தர்களால் இருக்கிற தென்பதை ஒருவாறு தெரிந்திருக்கலாம். ஆனால் உண்மையாக சுயமரியாதையை காக்கிறவர்களுக்கு இத்தடைகள் எம்மாத்திரம்? ஆனால், "நாமார்க்கும் குடியல்லோம்" என்று மார்புதட்டிக் கிளம்பக்கூடிய சுயமரியாதை வீரர்கள் மிகச் சொற்பம். மற்றவர்கள் பயத்தினாலே பேடிகளாய் வர அஞ்சுகிறார்கள். இத்தப்பயத்தை போக்க வேண்டுமானால் எல்லா உத்தியோகங்களையும் விகிதாசாரப்படி நாம் கைக்கொண்டே யாகவேண்டும்.

ஆகையால் அத்துறையிலும் ராயல் கமிஷனில் எல்லாப் பிராமணரல்லாதாரும் ஒன்று கூடி பிராமணர்களுக்கு இவ்வளவு பிராமணரல்லாதாருக்கிவ்வளவு என்று வகுத்து விடவேண்டும். பிராமணர்களுக்கு மூன்று வீதம் உத்தியோகங்கள் கிடைப்பதாயிருக்கா லும் நம்முடைய சகோதரர்கள் என்ற தாராள நோக்கத்துடன் நூற்றுக்கு ஐந்து வீதம் வேண்டுமானாலும் முதலிலேயே கொடுத்து விடலாம் பின்னால் மனஸ்தாபம் வேண்டாம். அந்த விட்டு தேசமென்றும் காங்கிரசென்றும் நினைத்து சமயத்தை விட்டு விட்டீர்களானால் கலியுகம் திரும்பவரை நாம் "சூத்திரர்கள்" என்பதை மறக்கக்கூடாது.

க. வா. வெங்கடாசலம் பிள்ளை

---

## பார்ப்பனப் புரோகிதம் ஒழிந்தது.

திருவண்ணாமலை தாலூகா மேல்புழுதியூர் கிராமத்திலிருக்கும் ஜி. கோபால் கிருஷ்ண ரெட்டியார் தன்னுடைய தாயாருக்கு 9—3—27 தேதியில் வருஷாப்திகம் பார்ப்பனரல்லாத தன் சொந்தக்காரராகிய திரு. என். வரதராஜுலு ரெட்டியாரைப் புரோகிதராக வைத்து கிரமமாக சிரார்த்தம் நடத்தினார். இந்த ஜாதியில் பார்ப்பனப் புரோகிதம் ஒழிந்தது இதுதான் முதல் தடவையாகும். இந்த வழக்கத்தை மற்றவர்களும் பின்பற்றவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறோம் என ஸ்ரீமான் என். வரதராஜுலு அறிவிக்கிறார்.

## ஆதிதிராவிடர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

1927-ம் வருஷம் மார்ச்சு மாதம் 6-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 9-மணிக்கு ஸ்ரீ போதானந்த குருஸ்வாமிகளும் அவரோடு ஆதிதிராவிடர்களும் கோயமுத்தூர் திருமால் வீதியிலுள்ள தாழ்த்தப்பட்டவர்கள் விடுதிக்குச் சென்று தெய்வ வொருவீட்டிலும் சுத்தத்தைப்பற்றியும் தர்மகைங்கரியத்தை ப்பற்றியும், சில போதனை முறைகளை போதித்து அவர்களால் கொடுக்கப்பட்ட தர்ம கைங்கரியத்தையும் அவர்களுக்கென்றே பொது விஷயமாய் தெய்வாருவாரும் அதேமாதிரியாக தர்ம கைங்கரியம் செய்யும்படியாயும் ஊர்ஜிதப்படுத்தி அவர்களுக்கு ஒரு பண்டாக சேகர செய்யும்படியாயும் அநேகரை பொருள்களை செய்யவேண்டுமாயும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

அநேகநாளாக அநேக பத்திரிகை மூலமாயும் பிரசங்க மூலமாயும் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றமடையவேண்டிய தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றமடையவேண்டுமென்று கூக்குரல் போடுகிறார்களே தவிர்த்தொருவராவது ஸ்ரீ போதானந்த குருஸ்வாமியைத் தவிர்த்து ஆதிதிராவிடர்கள் வசிக்கும்படியான இடங்களுக்குச்சென்று அவர்கள் படும்படியான கஷ்டங்களை கண்ணெடுத்துப் பார்த்தவர்களை கிடையாதென்று தெரியவருகிறது ஸ்ரீ போதானந்த குருஸ்வாமிகள் வந்தது ஆதிதிராவிடர்களுக்கு ஒரு வேண்டுகோளாய் அனைவர் மாத்திருக்கிற ஒரு சன்மார்க்க வழியானது அநேகமாய் ஒவ்வொருவருடைய மனதையும் கவர்ச்செய்கிறது.

ஸ்ரீ சுவாமிகள் ஆதிதிராவிடர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டே ஆதிதிராவிடர்களை வீட்டில் வசிக்க முன்னின்றது எங்கள் நற்பாக்கியமென்றே சொல்லவேண்டும். அன்னவர் வந்து தங்கியிருந்து ஆதிதிராவிடர்களுக்கு சீர்திருத்தம் கொள்கையை பண்ணுகிறது. இப்படியாக ஒரு மகான் எங்களுடைய கஷ்டங்களை அநுசரிப்பாராகில் எங்களுடைய முன்னேற்றங்களைப் பற்றி வெகுசீக்கிரம் கரையேறலாமென்றே தான் நாம் வேண்டியிருக்கிறது என்று கோயமுத்தூர் ஆதிதிராவிட அசோசியேஷன் காரியதரிசி அறிவிக்கிறார்.

---

## நாடார் மகாஜனசங்கம், மதுரை. லாட்டரியில் பிரைஸ் கிடைத்தவர்களுக்கு ஓர் அறிக்கை.

நாடார் மஹாஜன சங்கம் ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரி சீட்டில் பிரைஸ் கிடைத்தவர்கள் யாவருக்கும் 1927-ளு ஜனவரி-மீ 10-தேதி போந்த பிரைஸ் தொகைகளை கேரில கொடுத்தும் மணியார்டர் மூலம் அனுப்பியுமிருக்கிறோம் மணியார்டர் மூலம் அனுப்பியதில் சில விலாசதாரர்கள் சரியில்லாமலும் சிலருடைய விலாசங்கள் சரியாயில்லாததும் டெலிவரி செய்ய மார்க்கமில்லாது மணியார்டர்கள் வாபீஸ் வந்திருக்கின்றன.

ஆகையால் பிரைஸ் கிடைத்து பணம் பெற்றுக் கொள்ளாதவர்கள் அவரவர்களுடைய சீட்டை 1927-ளு ஏப்ரல்-மீ 30-ந்தேதிக்குள் சங்க ஆபீசுக்கு அனுப்பி பணம் பெற்றுக்கொள்ள வேண்டும் தவறினால் வாபீஸ் வந்திருக்கும் பணங்களை நாடார் மஹாஜனசங்கம் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் நிதிக்கு சேர்த்துக் கொள்ளப் பெறுமென்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

காரியதரிசிகள்.

---

திருவள்ளுவர் திருக்குறள் கழகம் 4-வது ஆண்டுவிழா:—நிகழும் அட்சய ஆண்டு மாசித் திங்கள் 30ம் நாள் 13-3-27-ந்தேதி மாலை திருமயிலை கபாலீசர் தென்மாட வீதி வன்னியர் சத்திரத்தில் மேற்படி கழக 4-வது ஆண்டு நிறைவுவிழா கார்ப்பரேஷன் மெம்பர் திவான்பகதூர் ஜி. நாராயணசாமிசெட்டியார் தலைமையில்நடைபெற்றது. திருவாளர்கள் மணி திருநாவுக்கரசு முதலியார் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், கி. குப்புசாமி முதலியார் முதலியோரா சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என்று விழையாளர்கள் அறிவிக்கிறார்கள்.

---

## அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" க்ஷேமநிதித் தர்ம பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள்.

1-வது பிரைஸ் ரூ 3 00, 2-வது பிரைஸ் ரூ. 1500, 3-வது பிரைஸ் ரூ 1000 4வது பிரைஸ் ரூ. 500, 5, 6-வது பிரைஸ் ரூ. ரூ 2 0.

100 ரூபாயில் 5 பிரைஸுக்கு ரூ. 500, ரூ. 50ல் 20-க்கு ரூ. 1000, ரூ. 20ல் 50க்கு ரூ. 1000, ரூ. 10ல் 100க்கு ரூ 1000, ரூ. 5ல் 200க்கு ரூ. 1000, 3ல் 600க்கு ரூ. 1800, ரூ. 2ல் 2400க்கு ரூ. 4800 ஆக பிரைஸ் 3381க்கு ரூ 17510, புக் 1500க்கு கமிஷன் ரூ. 3000, குமாஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ. 1800, தனிப்பிரைஸ் ரூ. 1700, பண்டுக்கு ரூ. 9000 ஆக ரூ. 33000

1. (4—5—1927) பிரபவ-ளு சித்திரை-மீ 22-ட புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப்பெறும்.

2. 33000 சீட்டுகளுக்குமேல் விற்பனையாகுமானால் சுவப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் சுவப்படி குறைக்கப்பெறும்.

3. 1-வது பிரைஸ் முதல் 6-வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளுக்கு முறையே 150, 75 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4. பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் சீட்டை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பப்படும்.

5. சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ஸ்ரீ ஆ. அ. முத்துசாமி நாடார் பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சூ அ. முத்துசாமி நாடார், பத்திராதிபர்.

நமக்கேற்ற நவீனக நாவல் — நாவலிற்சிறந்த நவீனக நாவல்

## உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அவரவரதிர்ஷ்டவசம் அறியலா மித்ரநிஜம் ஆனந்த ரகசியம் அற்புத ஜோசியம்.

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

## இரங்கூன் இரகசியம். ஓர் இன்ப செந்தமிழ் நாவல்.

செந்தமிழ்ச் சகோதரர்காள்! எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழேவைக்க மனமிராது. நாகரீகம், நவீனகம், புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்கிர்த மமைத்தது. அறிவை விளக்கி அகமகிழச்செய்வது. மோசம் நாசம் சும்பள் வேஷம் போடும் வயிற்றுப் பிழைப்பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக்காட்டுவது. அந்நிய தேச நிலைமைச கஷ்ட நஷ்டத்தின் பலனை போதிப்பது. சதிபதிகளின் சமுசார வாழ்க்கைத்துணை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்தி புகட்டுவது மனதின் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷம் கொடுப்பது. மாயப் பரதேசிகள், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச் செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோ வெடுத்துக்காட்டும் இன்றியமையாத இயல்புடைய முதல்தரமான நாவல். 200 பக்கம அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயிண்டு.

புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0. வி. பி, தபால் செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி P. நெ. 1051, 63, 29-வது கல்லி, இரங்கூன்.

## குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும் எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மானித்திருக்கிறது.


சந்தாவை முன்னதாகவே அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோருமா ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறேன்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

## திருப்பூர் கத்தர் பனியன்கள்.

கைராட்டின நூலினாலேயே தயார் செய்யப்பட்டது.

விலை நயமானது. சரக்கு மேலானது

Trade  Mark

28 இஞ்சு டஜன் 1க்கு 7-14—0
30 „ 8—4—0
32 இஞ்சு டஜன் 1-க்கு 8-10—0
34 „ 9—0—0

Registered.

உங்களுக்கு வேண்டிய சுத்த கத்தர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியனிலும் மேற்கண்ட அடையாளம் இருக்கிறதாவென்று கவனித்து வாங்கவும். ஒரே தடவையில் ஒரு டஜன் பனியன்களும் அதற்கு மேல்கொண்டும் வாங்குபவர்களுக்கு ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா விதம் கமிஷன் கொடுக்கப்படும். மானேஜர்:—

*M. V. K. Khaddar Banian Works, Tirupur (S. India)*

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். மாதிரிக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## தாய்மார்கள்.

கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்திசெய்து பால் வரும்படி செய்ய நம்மால் ஒரு இதங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம், அனுப்பும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபாற் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—
எ. எஸ். எ. மாந்ரீக டாக்டர்
இஜாரதார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.



பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்கள் மலிவாய் கிடைக்கும். கொட்லைச் இருப்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

நமது அச்சுக்கூடத்தில்
பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்.

மானேஜர்:—
உண்மை விளக்கப் பிரஸ், ஈரோடு.

இனம்! இனம்!! இனம்!!!

## ஜீவானந்த கைத்தொழில் போதினி

என்ற புத்தகத்தைப் பார்த்தீர்களா? இல்லையானால் இன்றைக்கே 0—8—6 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். இதில் பன்னீர் சோப், ஊதுவத்தி, வாசனை சோப், பரிமள ரோஸ் பற்பொடி. அஞ்சனம் இவ்விதமான அபூர்வ 8 முறைகளடங்கியிருக்கின்றன. கொஞ்சம்பிரதிகளே அச்சிட்டிருப்பதால் உடனே முந்துங்கள்.


விலாசம்:—S. V. இராம்தாஸ் நாயுடு,
கைத்தொழில் புரொபஸர்,
செம்பொன்னார் கோவில். (S.I.R.)

## காம கற்பம்.

தாதுபுஷ்டிக்கு மிக்க உயர்ந்தது.
அனுபவத்தில் அறியலாம். விலை ரூ. 1-தான்.

S. K. வரதராஜுலு நாயுடு,
கமிஷன் ஏஜண்டு, திருச்செங்கோடு. (S. I)

## நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி.
மதராஸ்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.